தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, மாசி 9 (21-2-'59). சனிக்கிழமை | இதழ் 36

சாரல்

ஓடிக்கத் தெரியாமல் ஓடிபட்டு நசுங்கி முறிந்த கரும்பின் சாற்றைப்பற்றி எத்தனை பேர் நினைக்கிருர்கள்? இது ஒரு கேள்வியா? கோமதியைப்போல் எத்தனை பேர் இருப்பார்கள் என்று நினைப்பது வீண் சிந்தனைதான். உலகம் நம்முடையது என்று சொல்லிக்கொள்வதற்கு வாயில்லை. இது வேடிக்கையாக இல்லை? எனக்கென்னவோ எல்லாம் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. அவல நிலையில் மனிதன் சிரிக்கிருனே, அந்தச் சிரிப்பின் வேடிக்கைதான். வேதனையை உதறிவிட்டு ஓடிவிடமுடியும் என்று நினைக்கவில்லை. வயது ஒன்றுதாஞ இங்கே மகிழ்ச்சிக்குரிய செய்தி? அதுகூட வேதனைதான். நியதிகள் என்று ஏற்பட்டுவிட்ட பிறகு உயிர்த் துடிப்புக்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை. கனிந்த இரும்பைப்போன்ற தத்துவமாக அல்லவா இருக்கிறது!

இந்த இடம் இதற்குமுன்பு 'எங்கோ' இருந்த இடம்தான். இப்பொழுது 'எங்கே' என்று தேடிக்கொண்டு வந்தாகிவிட்டது. பழக்கமற்ற இந்தப் புதிய இடத்திலும் அகநினைவுகளின் ஊற்றெருழுக்கு வற்றிவிடுவதாகத் தெரியவில்லை. புனிதத்தின் ஒளியில், அவை ஒளித்துண்டுகளாக நெளிந்து புரளத்தான் செய்கின்றன. நேற்றையக் கடலின் ஓலம்வரை எதுவும் மிச்சமில்லை.

இதயம் துடிக்கிறது. இது ஒரு சாதாரணம். இதயத்துக்காகத்தான் துடிப்போ, துடிப்புக்காகத்தான் இதயமோ என்று துணிந்து சொல்லத் திறமையில்லை. இந்த உலகத்தை அப்படியே தூக்கிக்கொண்டு போய், நரகத்தில் போட்டால்தான் என்ன? செறிக்கவா செய்யும்? இந்த ஆத்திரம், இந்த வேதனை, இந்தத் துடிப்பு இவையெல்லாம் இன்னும் எத்தனை நேரத்துக்கு இருக்கப் போகின்றன? எல்லாம் போயே போய்விடும். கோமதி இருக்கும்வரையில்தானே இவ்வளவும்!

வந்த இடத்திலா இந்த நினைவுகள்! இருக்கட்டுமே; மனிதனுக்கு அடங்காத ஒன்று மனம் என்ருல், மனதுக்கு அடங்காத ஒன்றுதானே இந்த நினைவுகள்!

அந்தத் தொண்டுக் கிழத்தின் ஒளி துலங்கும் பொலிவு இன்னும் தேயவில்லை. இன்னும்கூட அந்தக் கிழம் எப்படியெல்லாம் மழலை மிழற்றுகிறது! அந்தப் பழுத்த முகிலில்தான் எத்தனைத் துளிகள் இழிதருகின்றன! சுற்றிலும் இருக்கிற அமைதிகூட நனைந்து நனைந்து திளைக்கிறது.

......உள்ளது என்று ஒன்று இங்கே இருப்பது உள்ளம் ஒன்றுதான். ஒன்றுமில்லாத இந்த உள்ளத்திலும் ஒன்று இருக்கிறது. வேறென்றுமில்லை; சூனியம்தான். நுட்பமான சூனியம். அவ்வளவுதான். எதெதுவோ அதை அடைத்துக் கொண்டிருக்கிறது; எதையெதையோ அது அடக்கிக் கொண்டிருக்கிறது......

மயக்கமற்ற மயக்கம்தாஞ தத்துவம்! உண்மையான உண்மைதான். இதற்கா இந்தச் சிலிர்ப்பு இப்படி மெய் மறந்து போகிறது! நான் நாஞகவா இருக்கிறேன்? விழிகள் மூடிக் கிடக்கும் இந்த நிலையிலும் இறையின் விளக்கம் சொரிந்துதான் இருக்கிறது. நான் என்னவோ துறவிபோலவும், ஞானிபோலவும்...

...எல்லோரும் புத்தராகிவிட முடியாது. எல்லோரும் வள்ளுவராக வாழ்ந்து விடமுடியாது. அவர்கள் அளப்பரிய சூனியத்தை வென்றுவிட்டவர்கள். அவர்கள் இமாலய ஆசைகளை ஒடுக்கிவிட்டவர்கள்...

நெருப்பு சிலிர்ப்பதைப்போலிருந்தது எனக்கு. எதிரில் அந்தக் கிழம் சிரித்துக்கொண்டது. இங்கே என்ன இருக்கிறது? என்னைப் பார்த்துத்தாஞ சிரிக்க வேண்டும்? இதற்ாகவா இப்படி வெளியில் வந்துவிட்டேன்? பிறகு என்ன இருக்கிறது? எதிரில் கடல் இருக்கிறது. கடலுக்குக் கரை இருக்கிறது கடலை அகழ்ந்து யாரும் கரையை அமைத்துவிட வேண்டு மென்று நினைக்கவில்லை. ஆசைகள் என்று தனியாக இல்லை. இங்கே யாரும் கரையில் நீந்தும் மீன் இல்லை. புத்தராகவும் வள்ளுவராகவும் ஆகாமலே மனிதர்களாக இருக்கத் தெரியும். அறையில் இருக்கிற இந்த உருவங்களைப் பார்த்துக்கொண்டிருந்தால் கூடப் போதுமே.

கோமதிக்காக மட்டுமா அவற்றை வாங்கினேன்? வெறும் பொய். எனக்கும் சேர்த்துத்தான் வாங்கினேன். இன்னும்கூட எதுவும் நெகிழ்ந்துவிடவில்லை என்றுதான் நினைக்கிறேன். பிறகு கோமதியைப் பற்றி நான் என்னதான் நினைக்கிறேன்? யாரைப் பற்றித்தான் ஏன் நினைக்க வேண்டும்? யாரைப் பற்றித்தான் நினைக்க என்ன இருக்கிறது? இது சுத்த அசட்டுத்தனம்தான். கோமதியைப்பற்றி நினைக்கக்கூடவா ஒன்றுமில்லை!

உயர உயரப் பறந்து, நிறைய நினைக்காதவர்கள் இல்லை. சாதாரணத்திலும் சாதாரணமான சாமானியன் நான். நினைப்பதிலும் சொல்லுவதிலும் எதெது உண்மையோ, எதெது கற்பனையோ? யாருக்குத் தெரியும்? யாருக்கும் தெரிய வேண்டியதில்லை. எனக்குத் தெரிந்தால் போதும்.

ஒருநாள் அவள் அழக் கற்றுக் கொண்டாள். கொம்பு நிலவில் குந்தி, ஊசல் பற்றி ஊக்க வந்தவள், நியதிகளும் மரபுகளும் தன்னை எங்கோ கொண்டுபோய் எறிந்துவிட்டன என்று புலம்பிஞள். அதற்குப் பிறகு, பிறர் நெஞ்சு புகாத வள்ளுவப் பெண்மை என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை.

அப்பொழுதெல்லாம் ஒளியும் இல்லை; இருளும் இல்லை. கடைசியில் ஒரு தை மாதத்தில் அவள் இங்கே வந்தாள். அவளா வந்தாள்? வேட்டையாடிக் கொண்டல்லவா வந்துவிட்டார்கள். பிறகு ஒன்றும் நடக்கவில்லை. அவள் குனிந்துதான் கொடுத்துவிட்டாள். ஒளியைப் பிடித்து ஊடகக் கூண்டில் அடைத்துவிட்ட செய்தி அன்று யாருக்கும் தெரியவில்லை. இன்று மட்டும் யாருக்குத் தெரிந்துவிட்டது? எத்தனையோ ஒலிகள் எழுத்துக்கு அடங்காமல் இருக்கின்றன. எழுத்தில் அடங்கிவிட்ட ஒலியை நினைத்தபடி ஒலிக்கவா முடியும்?

வெப்பம் தணிந்த இந்த மாலையில் கடற்கரை கொழுத்திருக்கின்றது அலைகள் பேரிரைச்சலிடுகின்றன. இது ஒன்றும்புதுமையில்லை கோமதிக்குத்தான் புதுமையாகப் பட்டது. இந்த இடத்தில் எல்லாம் அவள் தனியாகவா நடந்தாள்? அந்தப் பக்கத்தில் வீட்டையும் இந்தப் பக்கத்தில் இந்தக் கடலையும் வைத்துக்கொண்டு என்றைக்கு அவள் நிறைவுடன் இங்கே வந்துபோஞள்? கடைசியில் எதிரில் வந்து நின்றுகொண்டு அழைத்தபோது நான் அதைச் சாதாரணமாகவா நினைத்தேன்? உலகத்தை அவளுக்குத் தெரியுமோ என்னவோ? என்னையும் அவளையும் உலகத்துக்குத் தெரியமாலில்லை. நெஞ்சை நனைத்துக்கொண்டுநெருங்கிஞள்.

"இதுவரையில் நான் அழைத்தேஞ? இல்லை, இனிமேல்தான் அழைக்கப்போகிறேஞ? இன்றைக்கு மட்டும் வாருங்கள். நாளைக்கெல்லாம் நான் அழைக்கப்போதில்லை."

பெய்கிற மழையில் காய்கிற வெய்யிலைப்போல் அவள் சிரித்தாள். இனிமேல் எங்கே சிரிக்க நேரமிருக்கிறது? சிரிக்க வேண்டுமென்றுதான் யார் நினைக்கிருர்கள் இன்னும்? கொஞ்சநேரம் இருக்கிறது. நிழல்தானே அவள். நினைத்த இடத்தில் நிற்கமுடியுமா என்ன? பிறகு?

அலைகளின் இந்தச் சுழற்சியில் அவள் இதயம் சுருண்டுதான் விழுந்தது. இந்தக் கடற்கரையில் தனிமையாக இருப்பதாக எண்ணமோ என்னவோ?

"இந்த அழகான அலைகள்எத்தனை அற்புதமாக ஆட்டம் போடுகின்றன! அசையும் சீரும் மயங்கிஞலும் அருமையான மழலைச் சங்கம் பொழியவில்லையா?"

எனக்குச் சிரிக்க வேண்டும்போலிருந்தது. நான் சிரித்து என்ன செய்வது? இந்த அலைகள் இப்படி நிமிர்ந்தெழுந்து குதித்தோடிப் போகின்றன. இவையா அழகான அலைகள்? இதுவா அற்புதமான ஆட்டம்? இதுவா அசையும் சீரும் மயங்கிய அருமையான மழலைச் சந்தம்?

எத்தனை வேதனைகள்? என்ருே எங்கோ, ஏதோ நம்பிக்கையில் பிறந்து, வடிவம் சிதையாமல் நெளிந்த இந்த அலைகளின் கனவுகள் இங்கே சிதைந்தல்லவா போய்விட்டன! கரை சேர வேண்டுமென்று ஏன் துடிக்கிருர்கள்? கரை சேர்ந்த அவலத்தை நினைத்தல்லவா இந்த அலைகள் நுரை பிழிந்து அழுகின்றன! கோமதிக்கு இவை எல்லாம் புரியாமலா இருக்கும்? புரிய வேண்டுமென்று இல்லை. ஏன் புரிய வேண்டும்? அவள் போன்ற இடத்தில்தான் கடல் இல்லையே!

இந்த நொய்ம்மணற் படுகையில் நடக்க முடியாமல்தான் திணறிஞள். எதிரில் கிடந்தஇந்தக் கட்டுமரத்தில் தான் காலை ஊன்றிக்கொண்டு, அங்கையில் முகத்தைத் தாங்கிய வண்ணம் அலைகளைப் பார்த்தாள்.

"...திரண்டு தெருட்டி வரும் இந்தப் பேரலைகள் பயங்கரமாக இல்லையா? இந்த நெய்தல் சிறுசுகள் எத்தனை துணிச்சலுடன் எதிர்த்துப் போரிடுகின்றன? எனக்கு ஒரே பயமாகிவிட்டது. இருந்தாலும் உங்களுக்கு இவ்வளவு துணிச்சல் கூடாது. பாதிப் புடவைக்குமேல்..."

கோமதி திரும்பிப் பார்த்தாள். படகோரத்தில் அந்த இனம் பிணங்கிக்கொண்டிருந்தது. துணியைப் பிழிந்து அவள் பதமாக உலர்த்திஞள். கொஞ்சமாவது அடக்கம் வேண்டுமே! யாருக்கு வேண்டும் அடக்கம்? அவன்

— 9-ம் பக்கம் —

இது ஆகாஷ்வாணி!

"இசை வெள்ளம் உங்கள் செவிகளை நிரப்பும்! கவிதைச் செல்வம் உங்கள் காதுகளை அடையும்! குயில் மொழியினர் தமிழ் மொழியில் பேசிப் பாடி உங்களுக்கு நாடக விருந்து வழங்குவர்! மூலையில் கிடக்கும் இலக்கியங்களை — அறிவுச் செல்வங்களை உங்கள்முன் படைக்கப் போகிறோம்! வெள்ளைக்காரன் காலத்தில் வெறும் குண்டு வெடிப்பும் ஆங்கிலச் சத்தமும் தாமே உங்கள் காதுகளைக் குடைந்தன. யுத்தப் பிரச்சாரமும், பிரித்தானியத் துதிப் பாடல்களும் தாமே உங்கள் காதுகளைக் குடைந்தன! வெள்ளைக்காரன் தன் பேரரசைக் காப்பாற்றிக்கொள்ள-ஏகாதிபத்தியத்தைநிலைநாட்ட,வானொலியை ஒரு கருவியாக வைத்துக்கொண்டான். மக்களின் பொழுது போக்குக்கான கேளிக்கை நிகழ்ச்சிகளை-அறிவு வளர்ச்சிக்கான விருந்துகளை அன்னார் வழங்கினரில்லை.

நாட்டு வளர்ச்சியிலே நாட்டம் கொண்ட இயக்கங்களின் தொண்டுகளை-அலுவல்களை-தூய பணிகளை அன்றுடம் மக்களிடம் அன்னார் சரியாகச் சொல்லியதேயில்லை. திரை போட்டு மறைத்தனர்.

கொடுமை இவற்றிற்கெல்லாம் கொதிப்பூட்டிய இத்தீச் செயல்களுக்கெல்லாம் இனி ஒரே மாற்றம்தான்!

உங்கள் சிந்தை மகிழும் சேதிகள்-இதயம் களிக்கும் இசை விருந்துகள்-அறிவு பெருகும் அரிய பேச்சுக்கள் அத்தனையும் உண்டு!

எங்கே! உங்கள் செவிகளை அகலத் திறந்து வைத்துக்கொள்ளுங்கள்! காதுகளைத் தீட்டி வைத்துக் கொள்ளுங்கள்!"

இப்படி "அன்பழைப்பு" விட்டனர்; அறிவிப்புக்கள் தந்தனர்; "ஆகா! ஒகோ!" என முழக்கினர்; கேஸ்கர் ஆலாபணம் செய்தார்; தெற்குள தாசானுதாசர்களும் ஆவர்த்தனம் செய்தனர்! இடி முழக்கம் விண்ணைப் பிளந்தது; இவர்கள் முழக்கம் செவியைக் கிழித்தது. இதையும் நம்பிய கூட்டம் அந்த நாளும் வந்திடாதா என எண்ணினர். ஆனால் நொந்த மனமும் வெந்த செவியும் நல்ல விருந்து பெற்றதாகக் காணோம்.

சீர்திருத்தங்கள் ஆயிரம் ஆயிரம் செய்யப்போவதாகத் தம்ஆட்சிநூலுக்குப் பாயிரம் தீட்டியபாரத புத்திரர்கள் திருந்துவதாகக்காணோம். ஏற்கனவே இருந்த ஏமாற்றங்கள் போதாதென இப்போது வேறு பல புதிய ஏமாற்றங்கள்! வெள்ளைக்காரன் அனைத்திந்தியாவிற்கும் கொடுமை செய்தான். புதிதாக அரியணை ஏறிய முடிசூடா மன்னர்களோ வெள்ளையனை நல்லவனுக்கிவிடுகின்றனர். வானொலியை ஆகாஷ்வானி யாக்கினர். சக்தி மிக்க வானொலிக் கருவிகளை வடக்கேயே வைத்துக்கொண்டனர். ஆனால் அவற்றிற்கு ஆகும் செலவுக்கெல்லாம் சேர்த்து நாமும் வரிப் பணம் செலுத்த வேண்டியிருக்கிறது.

ஒர வஞ்சனைச் செயல்களான இவற்றைத் "தென்றல்" பலமுறை கண்டித்திருக்கிறது. தென்னகத்தார்க்கு அன்னார் இழைத்து வரும் அநீதியைப் பலமுறை சுட்டிக் காட்டியும் வந்திருக்கிறது. அதே வரிசையிலே மேலும் இரு குற்றச்சாட்டுக்களைச் சாட்டுகிறது.

அரங்க ரத்தினத்தின் உண்ணுநோன்பு வலுத்துவரும் இந்த வேளையில்-"வானொலி" எனத் தீந் தமிழ்ச் சொல்லையே கேட்கப் போரிடும் இந்நேரத்தில், மறைவாக நடக்கும் இச்செயல்களை-இழிவு நிலைகளைக் கண்டிக்காமலிருக்க முடியாது.

ஆற்றல் மிக்க வானொலிக் கருவிகளை அங்கங்கே நிறுவியுள்ளனர் அரசினர். அவற்றில் தென்னகத்திற்குச் சென்னை ஒன்றில் மட்டுமே சற்று மிகுந்த ஆற்றல் வாய்ந்த கருவி உள்ளது. அதுவும் "விவித் பாரத்" நிகழ்ச்சிகளுக்குத்தான்.

எங்கேனும் முக்கிய விழாக்கள் நடப்பின் அவற்றை அஞ்சல் செய்யும் கடமை வானொலி நிலையத்தார்க்கு உண்டு. தமிழக விழாக்கள் ஏதேனும் நடப்பின் தப்பித் தவறி அவை அஞ்சல் செய்யப்படுவதுண்டு. அதுவும் குறைந்த ஆற்றலுள்ள திருச்சி வானொலி நிலைய டிரான்ஸ்மிட்டர் மூலம்தான். தமிழர் தம் நாட்டு நிகழ்ச்சிகளைத் தெளிவாகவும், தொலைவிலிருந்தாலும் நன்கும் கேட்கத் திருச்சியில் உள்ள டிரான்ஸ்மீட்டரின் ஆற்றல் போதாது. குறைந்த அளவு சென்னையில் உள்ள டிரான்ஸ் மீட்டரை வைத்தாகிலும் பரந்த அளவில் ஒலி பரப்புதல் வேண்டும். அந்த நல்ல வாய்ப்பைத் தருவதற்கு, கேளாக்காதினரான நடு அரசினருக்கு மனமில்லை.

ஆனால்......வட நாட்டில் எங்கெங்கோ எழுகின்ற இரைச்சலையெல்லாம் பெரிது படுத்திக் காட்டுகின்றனர். இந்தியாவில் உள்ள எல்லா நிலையத்தினரும் தமிழ் மக்களுக்குச் சற்றும் விளங்காத-பிடிக்காத இந்தி மொழியில் நிகழும் நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்வதில் ஓடோடி முனைவது சென்னை நிலையம் தானும்! தமிழ் மக்கள் விரும்பிக் கேட்கும் திருக்குறள் விழாக்களோ பிறவோ அஞ்சல் செய்யப்படுவதில்லை. அப்படி அஞ்சல் செய்யப்பட்டாலும் திருச்சியில் உள்ள குறைந்த ஆற்றல் உள்ள டிரான்ஸ் மீட்டரைக் கொண்டே ஒலி பரப்பப் படுகின்றன. இது நடக்கலாமா? நல்லதா? ஏன் இந்த ஒர வஞ்சனை? வடக்கத்திய நிகழ்ச்சிகளுக்குத் தரப்படும் வாய்ப்புக்கள் தெற்கத்திய விழாக்களுக்குத் தரப்படாததேன்? தெற்குள்ள மக்கள் அறிவுச்செல்வங்களைச் சுவைக்கக்கூடாது என்ற நச்சுக்கருத்தா?

அடுத்ததாகக் கூறப்படும் குற்றச் சாட்டு தில்லி வாழ் நிகழ்ச்சி அறிவிப்பாளர்கள்பற்றியதாகும். தில்லி நிலையத்திலுள்ள செய்தி-நிகழ்ச்சி அறிவிப்பாளர்கள், எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்ததாக நினைத்துக்கொள்கின்றனர் போலும். வடநாட்டு ஊர்கள்-அங்கு வாழ் மனிதர்கள் பெயர்களைச் சரியாக உச்சரிக்க தெளிவாகச் சொல்ல, பெரும் முயற்சிகளை எடுத்துக்கொள்கின்றனர். ஆனால் தென்னகத்து ஊர்களையும் பெரிய மனிதர்களையும் சொல்லும்பொழுது, "பேசுவது வெள்ளைக்காரனா? இந்தியத் துணைக் கண்டத்துக்காரனா?" என்ற அய்யம் கிளம்பத்தான் செய்கிறது. "மதுரை" என்பது "மடுரை" என்றாகி அதுவும் "மடுர்ரை" என்றாகி விட்டது. "சென்னை," "மதருஸ்" ஆகி "மத்ருஸ்" ஆகியிருக்கிறது. இன்னும் பலரின் பெயர்கள் தவறாக உச்சரிக்கப்படுகின்றன. தென்னகத்தார் பெயரை உச்சரிப்பதில் அத்துணை அக்கறையா?

இனி, காமராஜ் கமா ராஜ் ஆகலாம்! கிருஷ்ணராவ் கிஷன்ராய் ஆகலாம்! ஆமாம்! தென்னகத்தார் பெயர்களைக்கூட இந்தி வழிப்படி உச்சரித்து-வடவர் முறைப்படிச் சொல்லி, தென்னகத்தின் மொழி உணர்வை அழிக்க முனைவர்! இந்தி ஏகாதிபத்யத்தை மறைமுகமாகவும் நுழைக்கலாம். கொடுமைகள் இவற்றை அன்றுடம் கேட்கின்ற, "கமாராஜ்"களும் "ரமையா"க்களும் என்ன பதில் சொல்லப் போகின்றனர்?

வெள்ளைக்காரன் யுத்தப் பிரச்சாரத்திற்கு வானொலியைப் பயன்படுத்துவதா என வரிந்து கட்டிக்கொண்டு

மா. பாண்டியன்

கிளம்பியோர் தம் இயக்கப் பிரச்சாரத்திற்கு வானொலியைப் பயன்படுத்திக்கொள்ளலாமா?

"இனிய குரலும், நடிப்புத் திறனும், எழுத்து வன்மையும், இலக்கிய அறிவும் உள்ளார்க்கு வானொலியில் இடம் தராது, உறவுள்ளோர்க்கும் நட்புள்ளோர்க்கும் மட்டுமே வாய்ப்புக்கள் தருகின்றனர்!" என்று ஒரு குரலும் எழுகிறது. படுகிழங்களைக் கதா நாயகர்களாக நடிக்க வைக்கும் ரமணீயமான வானொலி நாடகங்கள்பற்றியும் நமக்குக் குறிப்புக்கள் வந்துள்ளன.

வானொலியினர் கதைத் துறைபற்றியும் ஏற்கனவே பல ஏடுகளில் செய்திகள் வந்துள்ளன.

ஆகாஷ்வாணியின் அரவணைப்பில் மதிமயங்கிக் கிடக்கும் ஞானசிகாமணிகளே! எல்லோரிடமும் வரி வாங்கினாலும் சிலரின் ஏகாதிபத்தியத்திற்கே பயன்படுகின்றீர்! நல்லாரிடமும் வல்லாரிடமும் பழி தேடுகின்றீர்; பகை தேடுகின்றீர்! வேண்டாம் வேதனையும் வீண் பகையும்!

தமிழரே! உங்கள் எதிர் காலம் உணர்ந்து சொல்கிறோம்! உதவாதீர் இந்தக் கெடுமதிப் படுகுழிக்கு! ஏனெனில் இது வானொலியல்ல; இது ஆகாஷ்வாணி! ஆமாம்! ஏ ஆகாஷ்வாணி ஹை! ★

விற்பனையாகிறது!

தோழர் டி. கே. சீனிவாசனின் கருத்துச்சித்திரம்!

★ ஆடும் மாடும் ★

(ஆசிரியர் அனுமதிபெற்று வெளியிடும் மலிவுப் பதிப்பு)

★ 'என்னுரை'யில் ஆசிரியர் டி. கே. சீ. தன் இதயத்தையே திறந்து காட்டுகிறர்!

★ எழுத்துலக வெண்ணிலா தோழர் நா. பாண்டுரங்கன் M.A. அளித்திருக்கும் பொன்னுரை; அதுவே ஒரு தனி இலக்கியம்!

விலை ரூ. 1-50

விற்பனையாளர்களுக்குத் தகுந்த கழிவு உண்டு.

அருணா பதிப்பகம்,
127, தெற்காவணிமூல வீதி,
மதுரை.

சென்னையின் விற்பனை உரிமையாளர்:
நேரு நியூஸ் மார்ட்,
லஸ் கார்னர் :: மைலாப்பூர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், கம்யூனிஸ்ட்களும் தென்றலில் வெளி வந்த 'டாங்கே எங்கே? ஒரு சோக வரலாறு', 'டாங்கே எங்கே? ஒரு விளக்கம்', 'டாங்கே எங்கே?' இரண்டாவது விளக்கம் ஆகிய மூன்று கட்டுரைகளையும் கவனத்துடன் படித்திருக்கிறார்கள். டாங்கேயை முக்கியக் கதா நாயகராகக் கொண்டு இந்தியக் கம்யூனிஸ்ட்களின் அரசியல் வாழ்க்கையின் அவலட்சணமான பல செய்திகள் தரப்பட்டுள்ளன. 'கரண்ட்' ஆசிரியர் காரகாவின் கருத்துக்களைக் கண்டபோது கம்யூனிஸ்ட்கள் இவ்வளவு மட்ட ரகமான அரசியல் வரலாற்றில் இருப்பது உண்மையாக இருக்க முடியுமா என்று சந்தேகத்துடனும், இதற்குக் கம்யூனிஸ்ட்கள் சரியான மறுப்புரைகள் தராமல் இருப்பதை உணர்ந்துகொண்டும், 'கரண்ட்' செய்திகளையெல்லாம்வார்த்தைக்கு வார்த்தை நேரடியாக மொழி பெயர்க்காமல் முக்கிய கருத்துக்களை எடுத்துக் காட்டி "கம்யூனிஸ்ட்களே விளக்கம் தாருங்கள், மறுத்துப் பேசுங்கள், காரகா சொல்வது பொய்யென்றால் வழக்குத் தொடருங்கள்!" என்றெல்லாம் முதலிரண்டு கட்டுரைகளிலும் கேட்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இப்படி ஒரு ஆபாசமான நிலையிலே இருக்க வேண்டும்; அதனை மக்களிடம் தேடிச் சென்று சொல்லி ஏதேனும் வளம் தேடிக் கொள்ள வேண்டும் என்ற தாழ்ந்த எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்றும் இல்லை. கடுமையான குற்றச் சாட்டுக்களைக் கேட்ட பின்பும் கம்யூனிஸ்ட்களின் தலைவர் டாங்கே இன்றுவரையிலும் மறுக்காமல் இருப்பதுபோலவே தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களும் இருந்திருப்பார்கள். ஆனால் 'தென்றல்' அவர்களைப் பார்த்துக் கேள்விகளை அடுக்கிய காரணத்தால் மட்டுமல்ல; அடித்தளத்திலேயிருக்கின்ற கம்யூனிஸ்ட் தோழர்கள் 'ரூ 5000 டாங்கேக்கு உபகாரச் சம்பளம்' என்ற செய்தியை உறுதிப்படுத்திக் கொள்ளப் பல தலைவர்களிடத்திலே இந்தப் பிரச்னையை எடுத்துக் காட்டி விளக்கமும் சமாதானமும் கேட்டதுதான் காரணமாகி, கம்யூனிஸ்ட் கட்சி இதழ் 'ஜனசக்தி' இப்போது காலங்கடந்து போய், களத்திலே சந்திக்க வந்துள்ளது. கடைசிச் செய்தியாக 31-1-59 இதழில் உரைகல் வீரர் அவர்கள் தனக்கேயுரிய அறிவித்தலை, அரசியல் தெளிவை, 'தென்றலும் திணறலும்' என்று விளக்கி ஆசிரியரைத் தாக்கி, அறிஞர் அண்ணாவையும் தூற்றியிருப்பதால் 'தென்றல்' நான்காம் முறையாகச் சந்திக்க வந்துள்ளது.

"'தென்றல்' மீண்டும் விஷம் கக்கியுள்ளது. உரைகல் மீது புலிப் பாய்ச்சலாகப் பாய்ந்துள்ளது. தோழர் டாங்கே உலகத் தொழிற் சங்க காங்கிரசிலிருந்து மாதா மாதம் 5 ஆயிரம் ரூபாய் கைக்கூலி பெற்று வருவதாகக் கயிறு திரித்துள்ளது"-தென்றல் 24-1-59 இதழில் தெரிவித்த செய்திகளைப்பற்றிய இந்த அறிவிப்பு எவ்வளவு அவசரத்திலும் அறியாமை நிறைந்த தன்மையிலும் தரப்பட்டிருக்கிறது என்பதையும் உணர வேண்டும். மதுரை நகரத்தில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிடம் பல தோழர்கள் டாங்கே விவகாரம்பற்றிய குற்றச்சாட்டை இல்லையென்று தெரிந்துகொள்வதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பற்றிய விளக்கமாகும். தோழர்கள் ராமமூர்த்தி, பாலசுப்பிரமணியம், மதனகோபால், ஏ. பி. பழனிசாமி, ஆதிநாராயணன், கார்மேகம் போன்றவர்கள் டாங்கேயின் 5000 ரூபாய் செய்தியைக் கேள்விப்பட்டுத் தட்டுத்தடுமாறி எதுவும் பேசாமலும், சிலர் 5000 ஆக இருக்காது 500 ஆகத்தான் இருக்குமென்றும், ஒருவர் கைக்கூலியாக இருக்காது கடனாக வாங்கியிருக்கலாம் என்றும், இன்னொருவர் பம்பாய்க்கு எழுதியிருக்கிறோம்; பதில் வரட்டும் என்றும் தெரிவித்துள்ளார்கள்! இவைகளையெல்லாம் எடுத்துச் சொன்ன பிறகு கடைசியில் உரைகல்லின் விளக்கத்தை தவறென்று சுட்டிக் காட்டி, டாங்கேயின் கதை முடியவில்லை; கட்சித் தோழர்களை ஏமாற்றுகிறீர்கள் என்று கேட்கப்பட்டது. ஆனால் உரைகல் தோழர் இதற்கெல்லாம் பதில் சொல்லாமல் 'தென்றல்' விஷம் கக்கிக் கயிறு திரித்துள்ளது என்று எழுதுகிறார்! மேலே சொன்ன தோழர்கள் கவனிக்கத்தக்கவர்கள் அல்ல என்று சொல்ல உரைகல் மாஜினியாருக்கு நெஞ்சுரம் இருக்காதென்றே நம்புகிறேன். ஏனென்றால் கம்யூனிஸ்ட் கட்சியில் இவருக்குக் காதல் ஏற்பட்டதே ஐந்து ஆண்டுகளுக்கு முன்புதான்! இன்னும் கட்சி நிர்வாகப் பொறுப்புள்ளவராக மதிக்கப்படவில்லை. 'ஜனசக்தி'யில் இருக்கிறார்; அவ்வளவுதான். இவர் எப்படி ராமமூர்த்தி ஆதிநாராயணன் போன்றவர்களை ஒதுக்கித் தள்ளுங்கள் என்று சொல்லமுடியும்? கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கும் தலைவரென்றாலே, முக்கியமானவர் என்று கருதப்படுவதற்கே கொஞ்ச காலமாவது மக்கள் மன்றத்திலேயிருந்து மறைந்து ஒளிந்துகொண்டு அது வைத்யனாதய்யர் வீடாக இருந்தாலும் சரி, இளைஞர் காங்கிரஸ் அலுவலகமாக இருந்தாலும் சரி-எங்காவது இருந்து கம்யூனிஸ்ட் கட்சியின் ரகசிய உத்திரவுகளுக்கேற்ப காரியங்களைக் கவனிக்க வேண்டும் என்பதாகும். இந்தத் தகுதி 'ஜனசக்தி' ஆசிரியருக்கு உண்டு. பொறுப்பாசிரியருக்கு உண்டா என்பது தெரியவில்லை. உரைகல் ஆசிரியர் மாஜினிக்கும் இருக்குமா என்பதை 'அந்தப் பேரறிஞர்' தெரிவித்தால் நல்லது. புடம் போட்டு எடுக்கப் பட்டுள்ள புதுக் கம்யூனிஸ்ட்டைப் புரிந்துகொள்ளலாம்!

14-1-59-ல் உரைகல் பகுதி தந்துள்ள கரண்ட் செய்தியின் மொழிபெயர்ப்புக்கு சரியான ஆங்கில வாக்கியம் டாங்கே பற்றிய கட்டுரையில் இல்லை. சோரனை இருப்பவர்கள்...பேனு சோரம் போகாதது என்றால் வாக்கியங்களை எடுத்துக் காட்டவேண்டும் என்பதைக் குறிப்பிட்டுக் கேட்கப்பட்டுள்ளது 24-1-59 தென்றலில்! டாங்கே கட்டுரைக்கு மறுப்பு எழுதியிருப்பவர்—அப்படி எண்ணிக்கொண்டிருப்பவர் இந்தக் கேள்விக்கு ஏன் சரியான பதில் தரவில்லை? தன்னுடைய பொய்புரைகளை திரும்பப் பெற்றுக்கொண்டு 'ஜனசக்தி'யின் வழக்கம்போல் ஏன் வருத்தம் தெரிவித்துக் கொள்ளவில்லை? இந்தக் கேள்விகளை மாஜினிக்குத் தரவில்லை. அந்தப் பெருமதியாளரின் பேனு எவ்வளவோ உயர்ந்தது என்று எண்ணிக்கொண்டிருக்கும் தமிழகத்துக் கம்யூனிஸ்ட் தோழர்கள் எல்லோருக்குமல்ல; சுயசிந்தனை படைத்த ஒரு சில கம்யூனிஸ்ட்களிடம் கேட்க விரும்புகிறேன்! தரங்கெட்ட உரைகல் என்று நம்புவீர்களானால் அதனை தூக்கியெறியுங்கள், மற்றவர்களும் மோதி இடறி விழாமல் இருப்பதற்காக! ஜனசக்திக்காரர் கரண்ட் ஆசிரியரின் எல்லாக் குற்றச் சாட்டுக்களையும் ஒப்புக்கொண்டவர் போல டாங்கே 5000 பெறுகிறார் என்பதற்கு மட்டும் மிகப் பெரிய நீண்ட விளக்கம் தந்துள்ளார்! ஒவ்வொரு பகுதியாக 'தென்றல்' பதில் கூறக் கடமைப்பட்டுள்ளது. எனவே மாஜினி பங்கப்படுகிறார் என்பதையும் மறந்து அந்தப் பரிதாபத்துக்குரிய பாரதக் கம்யூனிஸ்ட்களுக்கு மறுப்பளிக்கிறேன். வெளிநாட்டிலிருந்து டாங்கேக்குப் பணம் வருவதை இந்திய சர்க்கார் சொல்லவில்லையாம்! தென்றல் ஆசிரியர் இதனை சர்க்காரிடம் எடுத்துச் சொல்லி விசாரிக்கச் செய்யவேண்டுமாம்! மாஜினிக்கும் அவரது சகபாடிகளுக்கும் சொல்வேன்: தென்றலின் வேலை உங்களைப் பற்றியே பேசி, உங்களுக்கு மற்றவர்களிடத்திலேயுள்ள தொடர்புகளைத் துண்டித்துத்தான் வாழ வேண்டுமென்பதல்ல. மானங்கெட்டவர்களே! ஒரு பெருந்தலைவர் சம்பளம் வாங்கிக்கொள்கிறார் என்று உங்களிடம் விளக்கம் கேட்டால் நாங்களா காங்கிரஸ்காரரிடம் போய்க் கம்யூனிஸ்டைக் காட்டிக்கொடுக்கிறேன் என்று சொல்லவேண்டும்? இது கம்யூனிஸ்ட்களின் அரசியல் பண்பு. தன் சொந்தச் சோதரர்களைக்கூட எதிரிகள் என்றும் அடிமை முத்திரைக்கு லாயக்கற்றவர்கள் என்றும் மதிப்பிடும் தரங்கெட்ட பண்பு! 5000 போதாதென்றால் 50 ஆயிரம்கூட வாங்கிக்கொள்ளுங்கள். ஆனால் பொதுப்பணியின் பேராலே நாங்களே மக்கள் தொண்டர்கள் என்று மார்தட்டிக் கொள்ளாதீர்கள்! உங்கள் வேடம் கலைத்திடும் தென்றலைத் தேள் எனக்கூறி விடம் கக்குவதாக அலறித் துடிக்காதீர்கள்!

மாலங்கோவ் கொலை செய்யப் பட்டார் என்ற செய்தி தினஏடுகளிலும், தென்றலிலும் வெளி வந்தது உண்மை; முதல் செய்தியை மறுத்த குருஷ்சேவ் இரண்டாவது தரப்பட்ட செய்தியை மறுக்கவில்லை. மாலங்கோவ் உயிருடன் இருக்கிறார் என்று அவர் சொல்லவேண்டும் என்று எதிர்பார்த்த உலகத்துக் கம்யூனிஸ்ட்களுக்கு எந்தவிதச் சேதியும் கிடைக்கவில்லை இப்போது நடைபெற்ற 21-வது ரஷியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் மாலங்கோவின் நடமாட்டம் இல்லை. மாஜிப் பிரதமர் மறைந்த மாயம் ஏதோ. மாஜினி யாரே? புல்கானின் படுக்கையில் இருந்ததும் உண்மை. ஐருபினின் மரணம் அடைந்ததும் உண்மை. 'ஜனசக்தி' அன்றுமுதல் மௌனம் சாதிப்பதும் உண்மை. எனவே தென்றல் ஆசிரியர் வடிகட்டிய புளுகு சொன்னார் என்று எழுதுவதை நிரூபிக்க ஜனசக்திக்காரர்கள் இன்றே மாஸ்கோவிலிருக்கும் தங்களின் தலைவர்கள் சங்கரனிலிருந்து வெங்கட்டராமன் இறுதியாக எல்லோருக்கும் தெரிவித்து மாலங்கோவ், மாலட்டோவ் மற்றுமுள்ள லெனின் ஸ்டாலின் பிணங்கள் உள்பட எல்லோரும் உயிரோடிருப்பதாகவும் நேரில் கண்டு பேசிச் செய்திகள் பெற்று வரவும் ஏற்பாடு செய்யவேண்டும்! நவகேரளத்தின் நம்பூதிரிபாத்-மாநாட்டு 'கேட்'டிலே பேட்டிக்காக காத்து நிற்பவர் – மாலங்கோவ் பற்றிய உயிர்ச்செய்தியைக் கொண்டுவந்து தரட்டும்-யார் புளுகர்கள் என்பதை மக்கள் மன்றம் புரிந்துகொள்ளட்டும்! புது வருடத்தில் கேரள ஆட்சியை நேரு எடுத்துக்கொள்வார் என்று 'கரண்ட்' 1958 டிசம்பர் 10ந் தேதி எழுதியது பெரிய ஆகாசப்புளுகு என்று இப்போதே எப்படிச் சொல்ல முடியும்? புது வருடம் என்றால் 1959 ஜனவரி முதல் தேதி மட்டுமா - இந்த ஆண்டு டிசம்பர் 31-ந் தேதி முடிய என்பதை இந்தக் கம்யூனிஸ்ட் கர்ண கடூரமான மூளை உணராதது ஏனோ? பத்திரிகையைக் குறைகூறும் வேகத்தில் பகுத்தறிவையும் படித்த அறிவையும் பறிகொடுக்கலாமா? மாஜினி மேலும் எழுதுகிறார். "சென்ற ஆண்டில் இலங்கையில் வகுப்புக் கலவரம் நடைபெற்றதல்லவா?"-சிங்களவர்கள் தமிழர்களைத் தாயகம் நோக்கி ஓடுங்கள் என்று விரட்ட, அதற்கு பண்டாவின் சர்க்கார் பராக்குக் கூறிய பாதச்செயல்களை – தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் வகுப்புக்கலவரம் என்கிறார்கள். தமிழர் அணிதிரண்டபோது அங்கேயிருந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் பாராளுமன்றத்தில் பண்டார நாயகாவுக்குப் பக்கமேளம் தட்டினார்கள். பழிவாங்கப்படும் தமிழர்களைப் பற்றி நினைக்கவில்லை. இந்தக் கிளர்ச்சியில் இலங்கை சர்க்கார் ஏமாந்திருந்தால் கம்யூனிஸ்ட்களின் புரட்சியெனும் செயல் கிளம்பியிருக்காதா? 'கரண்ட்' சொன்னது தவறா?

ஜனசக்தியார் விரும்புவது வெளிநாட்டுப் பணம் வரவில்லை என்று நாம் நம்ப வேண்டுமாம்! தொழிற் சங்கங்கள் தங்கள் சொந்த வருமானத்திலே இயங்குகின்றன என்றும் உரைகல்லார் கூறுகிறார். 'தென்றல்' எடுத்துக் காட்டியதும், இந்த

கூடலரசன்

— 10-ம் பக்கம் —

குரு குலம்

"ஐயா! நான் புலவன், நன்குகப் பாடுவேன். ஆயின் பசிப்பிணி. ஒரு வாரமாகப் பட்டினி, மனைவிமக்களுடன் ஊர்க்கோடியிலுள்ள சத்திரத்தில் தங்கியுள்ளேன். யாசகம் கேட்க மனம் அஞ்சுகிறது! பாடுகிறேன் ஏதாவது பொருள் தாருங்கள் அதைக்கொண்டு எங்கள் வறுமையைப் போக்கிக்கொள்ளுகிறோம்." புலவர் பாடினர். சீமான் சிந்தை மகிழ்ந்தார். ஆகா! என்ன புலமை, என்ன இசைஞானம், என்ன இனிமை; கருத்து வளம் ஆருய் ஓடுகிறது. அருவியாய்க் கொட்டுகிறது. இவ்வளவு புலமையை வைத்துக்கொண்டா ஊர் ஊராய் அலைகிறீர், அல்லல்படுகிறீர்? கூடாது-கூடாது. நான் அமைச்சராய் இருந்தால் உம்மை ஆஸ்தான கவியாகவே வைத்துக்கொள்வேன். போகட்டும் இரும் இதோ வருகிறேன். சீமான் உள்ளே சென்றார். புலவர் மகிழ்ச்சியடைந்தார். "அடடா கவிதைப் பிரியர்போலும் — கொடைவள்ளல் போலும்; புலமையறிந்ததும் பொருள் கொண்டுவரப் போய்விட்டார்; வாழ்க நீடூழி!" புலவர் கண்ணை மூடிக்கொண்டு வாழ்த்தினர். அவர் கற்பனை, சத்திரத்திலுள்ள தன் மனைவி மக்களை நோக்கி ஓடியது. பொற்கிழி முடிப்போடு புலவர் வீரநடைபோட்டு வருகிறார். சிரித்த முகத்தோடு எதிர்கொண்டழைக்கிறுள் மனைவி. பொற்கிழி கை மாறுகிறது, உலை கொதிக்கிறது, எல்லோரும் விருந்து சாப்பிடுகிறார்கள் - குழந்தைகள் புத்தாடையுடுத்திக் குதூகலமாக விளையாடுகின்றனர். புலவரும் மனைவியும் இதைப் பார்த்து மகிழ்ச்சிக்கடலில் மூழ்குகின்றனர் - இப்படியாகப் புலவரின் கற்பனை வேகமாக ஓடியது. சீமான் வந்தார். 'புலவரய்யா" இத்தாங்க, இந்தப் பத்திரத்திரல் உங்களைப் பற்றியும், உங்கள் புலமையைப் பற்றியும் இசைஞானத்தைப் பற்றியும் பாராட்டி நிறைய எழுதியிருக்கிறேன். இதைக் கொண்டு போய் யாரிடம் காட்டினாலும் உம்மை மதித்து மாலைபோட்டு வரவேற்பார்கள். எனது பாராட்டுதலின்மூலம் உமது புலமைக்கு நல்ல செல்வாக்கு ஏற்படும். சென்று வாருங்கள்" எனக் கூறிவிட்டு சீமான் கதவைத்தாள் போட்டுக்கொண்டார். புலவர் கண்ணீர் வடித்தபடியே சத்திரத்தை நோக்கி நடந்தார்.

இந்தக் கதை ஒரு வாரத்திற்கு முன்பு அரசியலில் நடந்திருக்கிறது. "நீங்கள் தருகிற ஊதியம் எங்கள் வாழ்வுப் பிரச்னைக்குப் போதவில்லை. வாங்குகிற சம்பளம் இருபது நாட்களுக்கே இழுவல் பறியல். மீதம் பத்து நாட்கள் அரைப்பட்டினி—கால் பட்டினி. ஆகையால் எங்களுக்குப் போதிய அளவு வருவாயை உயர்த்தித் தாருங்கள் என்று மத்திய-மாநில அரசுகளுக்கு மூன்று வருடங்களுக்கு முன்பே கருணை மனுச் செய்துகொண்டார்கள் பரிதாபத்திற்குரிய பள்ளி ஆசிரியர்கள். பின்னர் குழுவாகச் சென்று நமது நிதியமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து நிலையை விளக்கினார்கள். அவரும் விரைவில் கவனித்து ஆவன செய்வதாக வாக்குறுதியளித்தார். விடிவதற்கு முன்னால் கட்டுமரத்தோடு கடல்மீது சென்ற தன் கணவன் வருகிருனு என்று மாலை மங்கியதும் எதிர்பார்த்து நிற்கும்மீனவர்குலத்துப் பெண்களைப்போல் பள்ளி ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அமைச்சரின் அறிக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். பலன் ஆசிரியர்களின் பிரச்னைபற்றி ஆலோசிக்கப்பட்டதாகவே தெரியவில்லை. கடந்த வாரம் குடியரசுத் தலைவர், கல்வித் துறையில் ஆசிரியர்கள் ஆற்றிவரும் சிறந்த சேவைகளையும், தொண்டுகளையும் பாராட்டிப் பரிசும் பத்திரமும் வழங்கியிருக்கிறார்.

"புராதன இந்தியாவில் குருக்களுக்கு இருந்துவந்த அந்தஸ்தும், மதிப்பும், கௌரவமும் மீண்டும் கிடைக்கும் வகையில் ஆசிரியர்களின் நிலை உயர்த்தப்படவேண்டும். ஆசிரியர்களின் பொருளாதார நிலைமை அவர்கள் செய்யும் முக்கியமான வேலையைப் பொறுத்து இல்லை. ஆசிரியர்களுக்குத் தரவேண்டிய மதிப்பை சமூகம் அவர்களுக்குத் தரவேண்டிய தருணம் வந்துவிட்டது" — இது ராஜன்பாபு அவர்களின் பாராட்டுரையின் ஒரு பகுதி. பொற்கிழி வருமென கனவுகண்ட புலவருக்குச் சீமான் பாராட்டுப் பத்திரம் வழங்கிய கதை. ஆசிரியர்கள் கேட்டதோ அமைதியான முறையில், நியாயத்தின் அடிப்படையில் உழைப்புக்கேற்றஊதியம்-தேவையான சம்பளம். குடியரசுத் தலைவரும் நமது நிதியமைச்சர் அவர்களும் ஆசிரியரின் அரும்பணியைப் பாராட்டுகிறார்கள். நீங்கள்தான் நாட்டின் இரு கண்கள். உங்கள் சேவை மகத்தானது. பெருமைக்குரியது. போற்றத்தகுந்தது. கல்வித் துறையில் ஆசிரியர்கள் ஆற்றுவது மாபெரும் தொண்டு—அதற்கு ஈடு இணை எது உண்டு என்று பல்லவி பாடிப் பாராட்டு வழங்குகிறார்கள். பாராட்டும் பட்டமளிப்பும் ஆசிரியர்களின் வறுமை நிலையைப் போக்குமா? தெலுங்கிலே ஒரு பழமொழி சொல்லுவார்கள். "பேரு பெத்தபேரு தாவ நீலுலேது-" அதைப்போல் பெருமையான பெயர்மட்டும் இருந்து பயன் என்ன? பாராட்டுரை வழங்கும் பெரிய மனிதர்கள் இதை எண்ணிப் பார்க்கவேண்டும். சாதாரணமாக புகைவண்டி நிலையங்களில் குப்பைகளை கூட்டிப் பெருக்குகிறவன் பெறுகிற சம்பளத்தைவிட ஆசிரியர்களின் ஊதியம் மிகக் குறைவானது. அரசாங்கத்தில் வேறு துறையில் பணியாற்றுபவர்களைவிட - தகுதி ஒன்றுக இருந்தாலும் குறைவான ஊதியம் பெறுகிறவர்கள் ஆசிரியர்கள்தான். நாளைய தேவைக்கென்று நான்கணுக் கூட மிச்சம் பிடிக்க இயலாத நிலையில் இருப்பவர்கள். எதிர்காலத்திற்கென்று எதையும் சேர்த்துவைக்க வசதியில்லாதவர்கள். ஆசிரியர்களில் யாருக்காவது இது, தான் சம்பாதித்த வகையில் என்று சொல்லச் சொந்தமாக ஒரு வீடு உண்டா? கையளவு நிலம் உண்டா? பாங்கியில் பணம் உண்டா? இல்லை இல்லை! ஆனாலும் அவர்கள் ஆசிரியர்கள்! கௌரவமாக மதிக்கப்படுபவர்கள்; வறுமைத் தேள் கொட்டினாலும், இல்லாமை, போதாமை இவைகளால் இடர்ப்பட்டாலும் வெளியில் தங்களுக்குள்ள கௌரவத்தைக்காப்பாற்றிக்கொள்ள வேண்டும். வீட்டில் உள்ள நிலைகளை மறந்தாகிலும் வெளியில் மினுக்கோடு வரவேண்டும். கண்ணெனப் போற்றக்கூடிய கல்வியைக் கற்றுக் கொடுப்பவர்கள், எதிர்காலச் சிற்பிகளை, அறிவுச்செல்வங்களை, பேரறிஞர்களை, மேதைகளை உருவாக்கித் தருபவர்கள், அரசாங்க யந்திரம் ஒழுங்குற நடைபெறத் திறமைசாலிகளை நிபுணர்களை உண்டாக்கித் தருபவர்கள், இளஞ்சிறுர்களுக்கு முதன் முதலில் எழுத்தை அறிவித்தவர்கள் என்ற வகையில் இறைவன் ஸ்தானத்தைப் பெற்றவர்கள், மாதா, பிதா, குரு தெய்வம் என்று தாய் தந்தையர்க்கு அடுத்து மரியாதைக்குரியவர்களாக மதிக்கப்படுபவர்கள். மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டி என்ற பெருமைக்குரிய அந்த குரு-குலம் மனநிறைவோடு வாழ வழியில்லை. குடும்பத்தொல்லையினால், பொருளாதார நெருக்கடியினால் தமிழ்நாட்டில் எத்தனையோ ஆசிரியப் பெருந்தகைகளின் குடும்பங்கள் தூக்கிலே தொங்கியிருக்கின்றன. குடும்பத்தோடு விஷத்தைக் குடித்துவிட்டு குலையோடு சரிந்துபோனவர்களின் எண்ணிக்கை ஏராளம். இங்குத் தான் பரிதாபத்திற்குரிய இந்த நிலை-இழிநிலை. வேறு பல நாடுகளில் ஆசிரியர்கள் போதுமான ஊதியம் பெறுகிறார்கள். அவர்களுக்கு வீட்டு வாடகை, வைத்தியச் செலவு, அவர்களின் குழந்தைகளுக்கு மேல்படிப்பு முடிய ஆகும் செலவுகள் அத்தனையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுகிறது. இங்கே பெரும்பாலான ஆசிரியர்களின் பிள்ளைகள் ஆறும் படிவத்திற்குமேல் படிக்க முடிவதில்லை. எந்த ஆசிரியரின் பிள்ளையாவது கல்லூரி வாசலைத் தொட்டுக்கொண்டிருக்கிருனென்றால் அவருக்குக் கடன் முகட்டை முட்டிக்கொண்டிருக்கிறது என்று பொருள். இந்த நிலையில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு மேலும் பேரிடியைத் தரும் வகையில் ஒரு சட்டத்தை உருவாக்கியிருக்கிறது நமது சென்னை அரசு. "மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கும் பள்ளிகளுக்கு, இதுவரை சர்க்கார் அளித்துவந்த (கிராண்டு) உதவிமான்யம் நிறுத்தப்படும். கட்டணம் வசூலிக்காத பள்ளிகளுக்கு மட்டுமே உதவிமான்யம் அளிக்கப்படும்." இந்த அரிய திட்டத்தை எந்த நன்மையை உத்தேசித்து சட்டமாகக் கொண்டு வந்தார்களோ அது அந்த அமைச்சர்களுக்குத்தான் வெளிச்சம். இதற்கு அவர்கள் பாணியிலேகூட வியாக்கியானமோ விளக்கமோ தரப்படவில்லை. முன்பு இவர்கள் அளித்து வந்த "கிராண்டே" ஒழுங்காக வழங்கப்படவில்லை. இரண்டு மாதத்திற்கொரு தடவை மொத்தமாகச் சேர்த்து அதை வாங்குவதற்குள் பள்ளி நடத்துபவர்கள் பெரும் பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டிய இருந்தது. அப்படிக் கிராண்டு கிடைக்கும்போதே பல பள்ளிக்கூடங்கள் செலவைச் சமாளிக்க முடியாமல் தவித்தன. இப்பொழுது வந்திருக்கும் இந்தப் புதிய சட்டத்தால் தனியார் நடத்தும் பல பள்ளிகள் மூடப்பட்டு விட்டன. ஆசிரியர்கள் முன்னறிவிப்பின்றி நீக்கப்பட்டுவிட்டார்கள். மூடப்பட்ட பள்ளிகளின் கதி! நீக்கப்பட்ட ஆசிரியர்களின் நிலை! இதற்கு முடிவு இன்னும் தெரியவில்லை.

இதற்கிடையில் நகரசபை தேர்தல் நெருங்கிவிட்டதால் ஓட்டுக்கு முன் பணம் கொடுப்பதுபோல் சம்பள உயர்வு என்ற பெயரில், என். ஜி. ஓவினருக்கு அளிப்பதோடு சேர்த்து ஆசிரியர்களுக்கும் ரூபாய் ஐந்து உயர்த்தி இருக்கிறார்கள். இது யானைப் பசிக்கு சோளப்பொறி போடுவதுபோலாகும்! இந்த "ஐந்து ரூபாய்" ஊதிய உயர்வைப் பெற எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது என்று வேதனையோடு தெரிவித்துவிட்டார்கள் என். ஜி. ஓ.வினர். ஆசிரியர்களோ இதைச் சொல்லவும் முடியாமல் தள்ளவும் முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அஞ்சல் நிலைய ஊழியர்களைப் போல், புகைவண்டித் தொழிலாளர்களைப்போல், என். ஜி. ஓவினரைப் போல் ஆசிரியர்கள் ஊர்வலமோ ஆர்ப்பாட்டமோ வேலை நிறுத்தமோ செய்ய முனையவில்லை. அமைதியாகவே தங்கள் பிரச்னைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்யவில்லை என்பதற்காக அவர்கள் கோரிக்கைகளை கவனியாமல் இருப்பதோ, அலட்சியப்படுத்துவதோ ஆபத்தான காரியமாகும். அவர்களும் மற்றவர்களின் முறையைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தால் கல்வியின் தரம்-மாணவர்களின் நிலை என்னவாகும் என்பதை அமைச்சர் பெருமக்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். எதையும் புகைந்துகொண்டிருக்கும்போதே கவனியுங்கள்; வெடித்த பின்பு வேதனைப்பட்டுப் பயனில்லை.

-தினகரன்

★ ★

— 9 ம் பக்கத் தொடர்ச்சி —

அவள் இன்னும் பேசாமல்தான் இருந்தாள். சுரிதக நினைவுகள் பெருமூச்சுகளில் தேம்பித்தவித்ததை நான் உணராமல் இல்லை. கடைசியில் பேனாவை எடுத்துத் துண்டுச்சீட்டில் இரண்டு மூன்று வரியை எழுதி மடித்து வைத்துக்கொண்டு அருகில் வந்தாள். பிறகு கொஞ்சம் நின்று இன்னும் நெருங்கி வந்தாள். நீரைச் சுண்டியவண்ணம் உற்றுப் பார்த்துவிட்டு, எல்லாவற்றையும் கொட்டிவிட வேண்டுமென்று நினைத்து, எதையும் கொட்டமுடியாமலேயே, பேசாமல் போய் மீண்டும் நாற்காலியில் உட்கார்ந்தாள்.

இடைகழியில் அம்மா அப்படியும் இப்படியும் ஓடினுள். கோமதி வானத்தைப் பார்த்தாள். 'எழுமுனி விண்மீன்' கவிழ்ந்து நின்று நேரத்தை உணர்த்தியது. வாயிற்படியில் வந்து நின்று, அம்மா அவசரப்படுத்தினுள். அதற்குமேல் அவள் உட்காரவில்லை. உதட்டைக் கடித்துக்கொண்டு உணர்ச்சிகளை அழுத்திவிட முயன்றாள். கடைசியில் அவை ஒரே சொல்லில் வெடிக்கத்தான் செய்தன. வளையல்களை இழுத்துச் செறித்தவண்ணம் அமைதியுடன் "போகட்டுமா?" என்றாள்.

"அடி அசடு, இப்படியா சொல்லிக்கொள்வது? 'வரட்டுமா'ன்னு சொல்லிவிட்டு வா" என்று சொல்லிவிட்டு அம்மா தெருவுக்கு விரைந்தாள். அவ்வளவுதான். கோமதியும் பறந்துவிட்டாள்.

கடைசியில் எனக்கு மிஞ்சியது இந்தத் துண்டுக் கடிதம்தான். இதைக்கூட எனக்கென்று நான் நினைக்கவல்லை. என்ன எழுதவேண்டியிருக்கிறது? என்ன இவள்!...

சுழன்றடித்துச் சுற்றிப் 'பொக்' கென்று போயிற்று இதயம். இவ்வளவுதானு மனிதன்? இதற்குத்தானு இத்தனை ஆரவாரம்? பெரிய வாழ்க்கை! பெரிய புனிதம்! இவையெல்லாம் எந்த மூலைக்கு? என்னதான் மனிதன் இவன்? கோமதி எழுதுகிறாள்:

'எனக்கு இப்பொழுது இரண்டு மாதம். எனக்காக, உங்களுக்கு நீங்கள் வாங்கிய புத்தரையும் வள்ளுவரையும் நான் எடுத்துக் கொண்டு போகிறேன். சரியா?'

-இரா. கோதண்டராமன்

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 5 ‖ 21—2—59 ‖ இதழ் 36

'ஆபாச' மசோதா

நடைபெற்று முடிந்த சட்டசபையில், 'பொது இடங்களில் ஆபாசத் தடுப்புச்சட்டம்' என்ற பெயரில், புதியதொரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது சென்னை காங்கிரஸ் ஆட்சிபீடம். இதன்மூலம், இனி பொதுச்சுவர்களில் எழுதுவதும், சுவரொட்டிகள் ஒட்டுவதும் ஆபாசமாகக் கருதப்பட்டு, அதற்கு ஒரு வருடச் சிறைத்தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.

சுவர் விளம்பரங்களின்மூலம் ஆபாசம் வளர்வதைத் தடுக்கவும், பிறரின் மனதைப் புண்படுத்தும் பிரச்சாரம் தடுக்கப்படுவதற்காகவும், நகரின் அழகு குலையாமல் காக்கப்படுவதற்காகவும் சட்டம் கொண்டுவரப்படுவதாக சட்டத்தை நிறைவேற்றியவர்கள் சார்பில் விளக்கப்பட்டுள்ளது.

சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு அதுதான் உண்மையான காரணம் என்றால், இப்போது புதிதாக இப்படி ஒரு சட்டம் கொண்டுவர வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால், இந்தச் சட்டத்தின்மூலம் எதைச் சாதித்துவிட முடியும் என்று ஆட்சியாளர் கருதுகிறார்களோ, அதைச் சாதிக்க முன்னமேயே பல சட்டங்கள் இருக்கின்றன. விரும்பத்தகாத செய்திகள் விளம்பரப்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு இ. பி கோ. 295-ஏ. பிரிவும், 'மதத்துவேஷ'த்தைத் தடுப்பதற்கு இ. பி. கோ. 425-வது பிரிவும் இருப்பதையும், அவற்றைத் தாங்களே சில வேளைகளில் பயன்படுத்தியுள்ளதையும் ஆட்சியாளர்கள் அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட முடியாது. உண்மையில் அந்தச் சட்டங்களாலும், அவைபோன்ற வேறுசில சட்டங்களாலும் உருவாக்க முடியாத எந்தப் புதிய ஒழுங்கையும் இப்போது வரும் புதிய சட்டம் அளித்துவிட முடியாது. ஆனால், இந்தச் சட்டப்போர்வையில், எதிர்க்கட்சிக்காரர்களை அடக்குவதற்கு, ஆளுங்கட்சியினருக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆமாம், இனி தங்கள் கோரிக்கைகளை, ஆட்சியாளருக்கு எதிரான முழக்கங்களை சுவர்களில் எழுதும், விளம்பரம் செய்யும் எந்த எதிர்க்கட்சிக்காரர்களும் இந்தச் சட்டத்தைக் காரணமாகக் காட்டி தாராளமாகத் தண்டிக்கப்படுவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

பெரும்பான்மை பலத்தை மட்டுமே நம்பிக்கொண்டு, இன்றைய காங்கிரஸ் ஆட்சி செய்துவரும் ஜனநாயகக்கொலைத் திருப்பணியில் இந்த சட்டம் முக்கியமானதொரு இடத்தை வகிக்கிறது. சட்டங்களை உருவாக்கு முன்னரே தாங்கள் நினைத்தபடி நடந்துகொள்ளும் இந்தக் 'காட்டுராஜா'க்கள், நிறைவேற்றப்பட்ட சட்டத்தை வைத்துக்கொண்டு என்னென்ன செய்வார்கள் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

ஆபாசமான ஒன்றைத் தடுப்பது என்பதையே திரும்பத் திரும்பக் குறிப்பிட்டிருக்கிறார்கள் சர்க்கார் கட்சிக்காரர்கள். ஆபாசமானது எது என்பதை அவர்கள் தெளிவாக விளக்கவில்லை. விளக்கவில்லை என்பதைவிட, அவர்களால் விளக்க முடியவில்லை என்பதுதான் பொருத்தமாகும். எப்படிக் கணக்குப் பார்த்தாலும், அவர்களுடைய 'ஆபாச'த்திற்கான பொருள் இதுதான் : அவர்களுக்குப் பிடிக்காத எதுவும் 'ஆபாசம்' என்ற பொருளிலேயே குறிக்கப்படும். எனவே, பிடிக்காத எதிர்க்கட்சிக்காரர்கள் இனி பழிவாங்கப்படுவதை நாம் காணமுடியும்.

எல்லா விஷயங்களுக்கும் 'அகில இந்திய' ஒப்பாரி வைக்கும் சென்னை ஆட்சியாளர்கள், மற்ற எந்த அனைத்திந்திய மாநிலத்திலும் இல்லாத இந்தப் புதிய சட்டத்தைக் கொண்டுவருவதில் மட்டும் அந்த 'ஒற்றுமை'யை மறந்துவிட்டதுதான், உண்மையில் இவர்கள் யாரை மனதில் வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதைப் புலப்படுத்துகிறது. இந்த நமது கருத்து தவறானதல்ல என்பதையே, 'தி. மு. கழகப் பிரச்சாரத்தை மனதில் வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை' என்ற அமைச்சர் பக்தவத்சலனாரின் சட்டசபை உரை சொல்லாமல் சொல்லுகிறது.

சட்டத்தை எதிர்த்து உரையாற்றியபோது, அறிஞர் அண்ணா அவர்கள், 'ஜனநாயகத்தில் அதிருப்தியைத் தெரிவிப்பதற்கு வழிவகைகள் இருக்க வேண்டும். சுவரில் எழுதுவதில் தவறு என்ன? சுவரில் எழுதுவது சிறுபிள்ளைத்தனமாகாது. இம்மசோதா உண்மை ஜனநாயக உணர்ச்சியை ஒடுக்குவதாகும்' என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். எனினும், பெரும்பான்மையோரின் 'கைதூக்கல்' பலத்தில் சட்டம் நிறைவேறியிருக்கிறது.

இனி, சட்டத்தின் 'சாதனை'களைப் பொறுத்திருந்து பார்ப்போம்! ★

சென்னை மாநிலத்தில் வீடு கட்டும் திட்டங்கள்

[கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வீடு கட்டுவதில் உள்ள குறைகளைக் கண்டிக்கிறது இக்கட்டுரை.]

சென்னை மாநிலத் திட்டங்கள் பல; அதற்காக ஒதுக்கி வைக்கப்படும் நிதியும் ஏராளவுண்டு. இத்தகைய திட்டங்கள் யாருக்காக?

புலித்தோல் போர்த்திய பசுவாக நடமாடி வரும் "சென்னை ராஜ்ய" மந்திரிகளை கேட்டால் சொல்லுவார்கள், சென்னை மாநிலத்தில் உள்ள ஏழைகளுக்காக—தொழிலாளிகளுக்காக—விவசாயிகளுக்காக என்று! இதே கேள்வியை ஒரு ஏழைத்தொழிலாளியிடம் கேட்டால் அவன் சொல்லுகிறான் "இத்திட்டங்கள் தங்களையும் தங்களைத் தேர்தலில் ஆதரித்த பணம் படைத்த சில தேச பக்தர்கள் என்று சொல்லிக் கொண்டும் மனிதர்களை ஏமாற்றிக்கொண்டும் மானிடர்களாகத் திரியும் பிரமுகர்களுக்காக ஏற்படுத்தப்பட்டதாகும்!" என்று. எது உண்மை என்று பகுத்தறிவைக் கொண்டு நாம் ஆராய்ந்து பார்த்தால், தொழிலாளி கூறுவது உண்மை என்று விளங்கும். ஏன்? ஒரு தொழிலாளி தன் மாத வருமானமாக ரூ. 100 அடைகிறான் என்று வைத்துக் கொண்டால், அவன் தன் குடியிருப்பு வாடகையாக (சென்னை மாநில ஊழியர் ஒருவருக்கு ரூ. 100 சம்பளமாக இருந்தால் அதில் 10 சத விகிதத்தை வீட்டு வாடகையாகக் கொடுத்து விடுவது) ரூ. 10 தான் கொடுக்கலாம். தற்போது ஒருநபர் தன் குடும்பத்துடன் மிகவும் சாதாரண வசதிகளுடன் வசிக்கக்கூட ரூ. 20-க்குக் குறைந்த வாடகை உள்ள வீடாகக் கிடைப்பது மிகவும் கடினம். அவ்வாறு இருப்பதால் இக்குறைந்தபட்ச வாடகையைக் கொடுக்க அவன் என்ன செய்யமுடியும்? இதை தவிர்க்க இத்தொழிலாளி மாநில சர்க்கார் ஏற்படுத்திய திட்டப்படி தனக்கென்று ஒரு வீடு வாங்க ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அணுகி, அச்சங்கத்தின் சட்ட திட்டங்களை கேட்பானேயானால், தன் வாழ்க்கையை இனி இவ்வுலகத்தில் நடத்துவதைவிட ஒரு முழக் கயிற்றால் தான் மட்டுமன்றித் தன்னை நம்பி இருக்கும் மனைவி மக்களின் வாழ்க்கையையும் விரைவிலேயே முடித்துக்கொண்டு விடலாம் என்று எண்ணும்படி நேரிடுகிறது. காலிருந்தும் அவனை முடவனாகச் செய்கிறது. முடவனே, நீ கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா? என்று கேட்பதுபோல் சங்கத்தின் சட்டங்கள் கேட்கின்றன அத்தொழிலாளியை. ஏன்? சங்க சட்ட திட்டங்களின்படி ஒரு தொழிலாளி—வாழ்வதா சாவதா என்று தன் வாழ்க்கையின் தத்துவத்தைத் தீர்மானம் செய்துகொண்டே இருக்கும் ஒரு ஏழைத் தொழிலாளி—ஒரு குறிப்பிட்ட மொத்தத் தொகையை வீடு கட்டும் சங்கத்திடம் செலுத்த வேண்டும். பிறகு வீடு கட்டும் இடத்தின் கிரயம், வீடு கட்டும் தொகை இவைகளிலிருந்து தான் முதலில் செலுத்திய தொகை போக மிகுதியை 20 வருடங்களில் மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைச் சங்கத்திற்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தும் தொகையானது, அத்தொழிலாளி சங்கத்திற்காகக் கொடுக்க வேண்டிய முதலும் அதற்கு 20 வருடங்களுக்குரிய வட்டியுமேயாகும். இவ்வாறு சங்கம் ஒருவரிடம் மாதா மாதம் வசூலிக்கும் தொகையானது ரூ. 20-க்குக் குறைந்து நிர்ணயம் செய்துள்ளதாக யாரும் கேள்விப்பட்டிருக்கமாட்டார்கள். சங்கம் 20 வருடங்களில் வீடு கட்டுபவரிடமிருந்து வாங்கும் வட்டியானது பகுத்தறிவைக்கொண்டு **ஆராயாமல்** பார்த்தல், இது போன்றதொரு சலுகையைக் காங்கிரஸ் ஆட்சியைக் கொண்ட சர்க்கார் அன்றி வேறு எவராலும் சாதிக்கமுடியாது; அது ஒரு அரும்பெரும் சாதனை என்று தோன்றும். ஆனால் ஆராய்ந்து பார்க்குமிடத்து ஒரு நபர் 20 வருடங்களில் செலுத்தும் தொகையில் பெருமளவு வட்டியாகவும், அச்சங்கத்தின் வாயிலாக வீடு கட்டிக் கொடுத்த கண்ட்ராக்டர்கள் சுரண்டிய பணமுமேயாகும். இதை நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் தொழிலாளி கேட்க நேரிடின் அவன் அதிர்ச்சியால் திடீர் மரணம் அடைவான். தவிர மாதந்தோறும் சாதாரணக் குடியிருப்பு வீட்டைத் தன் உடைமையாக்கிக்கொள்ள விரும்பும் மாதம் ரூ. 100 வருமானமுள்ள ஒரு தொழிலாளி மாதா மாதம் ரூ. 20 வீதம் கட்ட வேண்டுமாயின் அவன் நிலைமை என்னவாகும் என்பதை திட்டங்கள் வகுக்கும் காங்கிரஸ் ஆட்சி கவனிக்காததன் மர்மம் என்ன? எந்த திட்டத்தை ஒரு சாதாரண வருவாய் உள்ள தொழிலாளி மாதம் ரூ. 10-க்கும் குறைத்து சங்கத்திற்கு கட்டி, 10 வருடங்களில் அல்லது 20 வருடங்களில் தன் உடமையாக்கிக்கொள்ள இதுவரை திட்டம் வகுத்திருக்கிறது?

இதுதான் சுதந்திரக் காங்கிரஸ் சென்னை சர்க்கார், தென்னக மக்களின் வாழ்க்கையை உயர்த்த சென்ற 10 ஆண்டுகளில் செய்த அரும்பெரும் செயலா? எந்தத் திட்டம் இதுவரை ஒரு ஏழைத் தொழிலாளி அல்லது விவசாயியின் குடியிருப்பு வசதிக்காக ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும்? இதுதான் புனிதமான காங்கிரஸ தியாகிகள் என்று சொல்லித் திரியும் காங்கிரஸ் மந்திரிகள் சொல்லும் சோஷலிசத் திட்டமா? இதற்கு விடையைப் பொதுமக்கள் இனி வரப் போகும் தேர்தல்களில் காங்கிரஸ்காரர்களுக்கு பாடமாக சொல்லிக் கொடுக்க வேண்டும்.

—கே. எஸ். இராமசாமி

— கண்ணதாசன் —

பின்னாலேயே வந்த சின்ன மருது, 'பொன்னுத்தா! புறப் படத் தயாராயிரு' என்றார். பெரிய பாண்டியரின் வார்த்தை களைவிட, இந்த வார்த்தைகளே இளையராணியை அதிகமாகக் கலங்க வைத்தன. பெரிய ராணி அதிர்ச்சி யடைந்தாள்.

'ஏன்? எதற்காக?' என்று சின்னமருதுவைக் கேட்டாள்.

'இனிச் சிறுவயலிலேயே தங்க உத்தேசம்!' என்றார் சின்ன மருது.

'காரணம் இல்லையா? புரியும் படி சொல்!' என்றாள் பெரிய ராணி.

'ஒன்றுமில்லை. கொஞ்சம் ஓய் வெடுத்துக் கொள்ளலாமென் றிருக்கிறேன்.'

'இன்னும் எனக்குப் புரிய வில்லை. எந்தக் காரணம் பற்றி நீ இந்த முடிவுக்கு வந்திருந் தாலும் சரி, இது தவறு என்பது மட்டும் எனக்கு உறுதியாகப் படுகிறது. ஏதோ நடந்திருக் கிறது என்பதை என்னால் யூகிக்க முடிகிறது. அது என்ன என்பதை உன் அண்ணனிடமே கேட்டுத் தெரிந்துகொள்கிறேன். உங்கள் இருவருக்குள் மனத் தாங்கல் ஏற்பட்டிருந்தாலொழிய இந்த முடிவுக்கு நீ வந்திருக்க முடியாது. பொன்னுத்தாளின் கண்கலக்கமும் எனக்கு அதைத் தான் சொல்கிறது. பெரியவர்கள் அப்படித்தான் கோபித்துக் கொள்வார்கள். அதற்காகப் பொறுப்பான இடத்தில் இருக் கின்றவர்கள் அந்தப் பொறுப் பைத் தட்டிக் கழித்துவிட்டு ஓடக்கூடாது. சரி, அப்படியே நீ போவதாக முடிவு கட்டினாலும் இரண்டுநாள் கழித்துப் போ. அதற்குள் மனது எவ்வளவோ மாறிவிடும்' என்றாள் பெரிய ராணி.

'இல்லை. என்னைத் தடை செய்ய வேண்டாம். பொன் னுத்தாள்! புறப்படு! நான் காரி யஸ்தரிடம் பொறுப்புகளை ஒப் படைத்துவிட்டு வருகிறேன்' என்று கூறிவிட்டு நடந்தார் சின்னமருது.

அவர் வெளியே செல்வதற் கும் பெரியபாண்டியர் உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது.

'தம்பியிடம் என்ன கோபம்?' என்று கேட்டாள் பெரியராணி.

மூத்த கொழுந்தனுக்கு முன் னால் நிற்கக்கூடாது என்னும் மறவர்நாட்டு வழக்கப்படி, தன் அந்தப்புரத்துக்குச் சென்றுவிட் டாள் இளையராணி.

'கோபம் என்ன கோபம்; இங்கே பொறுப்பிலிருந்து கொண்டு பாளையங்கோட்டைக் குச் சென்று வந்திருக்கிறானும். தேவையில்லாமலே வம்புகளை வருவித்துக்கொள்வதை எப்படி அனுமதிப்பது? அவன் சிறு வயலுக்கே போய்விடட்டும்!' என்றார் பெரியபாண்டியர்.

'ஏதோ நடந்தது நடந்து விட்டது. இந்தத் தடவை அவனை மன்னியுங்கள். பொன்னுத்தாள் மிகவும் கலங்கிப் போயிருக் கிறாள். எனக்கும் அவள் போய் விட்டால் என்னவோ போலிருக் கும்' என்று உருக்கமாக வேண் டினாள் பெரியராணி.

'பார்ப்போம்' என்று பெரு மூச்சு விட்டபடியே கட்டிலிலே சாய்ந்தார் பெரியபாண்டியர்.

கோபித்துக்கொண்டு சிறிது நேரம்தான் ஆகியிருந்தது. அதற் குள் அவர் மனம் இளக ஆரம் பித்துவிட்டது. பாசமும் பழக்க மும் மிகவும் வலுவுடைய சக்தி கள். மனித இயல்புகளை அவை ஆட்டிவைத்துக் கூத்துப்பார்த்து விடுகின்றன. திடீர் திடீரென்று உணர்ச்சியும் போக்கும் மாறு படுகின்றன. ஒருகணம் அழுகை, மறுகணம் சிரிப்பு - நிலையான இயல்புகளுக்கு இது பகை. ஆனால் பாசத்துக்கும் பழக்கத் துக்கும் இந்த நிலைதான் உறவு. கோபத்தால் எழுந்த கரம் பிள்ளையை அடித்து விடுகிறது. அதே கரம் கணமும் தாமதியா மல் தூக்கி அணைத்துக்கொள் கிறது. உறவுகளால்தான் உலகத் தில் உயிரோட்டம் இருக்கிறது. ஒவ்வொரு சமயங்களில் எழு கின்ற உணர்ச்சியே நிரந்தரமாக அமைந்துவிடுமானால், மனித னின் ஒரு கரத்துக்கும் மறுகரத் துக்கும் இடையிலேகூட பிளவு அதிகரித்துவிடும்.

பெரியபாண்டியர் பாசத்துக் கும், பழக்கத்துக்கும் கட்டுப் பட்டவர். மிகச் சிறிய பூமியின் தலைவரென்றாலும், உறுதியான அரசு கண்டவர். ஆடம்பரமான அரசுகள் முடிவுற்ற இடத்தில், எளிமையான அரசு அவர் தலைமையில் துவங்கியது. அரசின் எளிமைபோல் மனஎளிமையும் கொண்டிருந்ததால், ஆசாபாசங் களுக்கு அதிகமாகக் கட்டுப் பட்டவரானார். அரச பரம்பரை களைப் பற்றிய வரலாற்றில் இந்த நிலை இல்லை. தந்தையைக் கொன்று முடிசூடிக் கொண்ட வர்கள், அண்ணனைக் கொன்று அரியாசனத்தைக் கைப்பற்றிய வர்கள் வரலாற்றின் பெரும் பகுதியை நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பெரியபாண்டியரைப் பொறுத்த வரை, பெரிய தவறைச் செய்து விட்ட தம்பியை கடுமையாகக் கோபித்துக்கொண்ட பிறகும் மன்னிக்கின்ற குணநலம் இழை யோடி வந்தது. 'பார்ப்போம்' என்று அவர் சொன்ன ஒரு வார்த்தை, அவர் எவ்வளவு தூரம் அமைதியடைந்து விட்டார் என்பதைக் காட்டிற்று. பெரிய ராணி பதில் கூறவில்லை. பெரிய பாண்டியரே சின்னமருதுவைப் போகாமல் தடுத்து விடுவார் என்ற நம்பிக்கையோடு, கால் களைப் பிடிக்க ஆரம்பித்தாள்.

அரண்மனை முன்பகுதி மண்ட பத்திலிருந்த காரியஸ்தரிடம் வந்தார் சின்னமருது. அங்கே கறுத்தான் ரகசியம் பேசிக் கொண்டிருந்தான். அவனை உதைக்கலாமா என்றுகூட அவ ருக்குத் தோன்றிற்று. அவனும் நிலைமையைப் புரிந்துகொண்ட வனாய், அவர் வந்ததும் எழுந்து சென்று விட்டான். சின்னமருது காரியஸ்தரின் எதிரில் அமர்ந்து, கொடுக்க வேண்டிய சாவிக் கொத்துகளையெல்லாம் கொடுத்து, சொல்லவேண்டிய வற்றையும் சொல்லி முடித்தார். பின்னாலேயே, பெரியபாண்டியர் அழைப்பதாகச் சேவகன் வந் தான். இது சின்னமருது எதிர்

---

3. எண்சீர் விருத்தம்.

ஓர் அடி :

முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே?

முடிவு தேதி: 7-3-'59.

தென்றல் விருத்தப் போட்டி : : சென்னை - 6.

பார்த்ததுதான். அண்ணனின் குணம்தான் அவருக்கு நன்ருகத் தெரியுமே! எழுந்து உள்ளே சென்ருர்.

பெரியபாண்டியர் அவர் முகத்தைப் பாராமலே, 'இன்னும் பத்துநாள் கழித்துப் போகலாம்' என்ருர்.

'இல்லே; இன்றைக்கே புறப்படுகிறேன். ஒரு மாதம் சிறுவயலில் இருந்துவிட்டு வருகிறேன்' என்ருர் சின்னப்பாண்டியர்.

அதற்குமேல் பேச பெரிய பாண்டியர் விரும்பவில்லே. அதே நேரத்தில், சின்னவர் சிறுவயலுக்குப் போவதையும் அவர் இப்போது விரும்பவில்லே. சாடையாகப் பெரியராணியைப் பார்த்தார். பெரியராணி கொஞ்சம் கடுமை தொனிக்க, 'எதற்கெடுத்தாலும் மறுத்துப் பேசாதே. பேசாமல் இங்கேயே இரு!' என்று வலியுறுத்தினுள்.

சின்னப்பாண்டியர் சிறுவயலுக்கே போகவேண்டும் என்று பிடிவாதமாக இருந்ததற்கு, வேருெரு நோக்கமும் காரணமாக இருந்தது. எப்படியாவது பாஞ்சாலங்குறிச்சியில் ஊமையன்கோட்டைப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்; சிவகெங்கையிலிருந்தால் அது நடக்காது; கறுத்தான் நிழல்போலத் தொடருவான். சிறுவயலுக்குப் போய்விட்டால், அங்கிருந்து பாஞ்சாலங்குறிச்சிக்குப்போவது எளிது. அதனுலேயே அவர் பயணத்தை நிறுத்தமுடியாது என்ருர். இளமையின் துடிப்பு அந்நியரை முறியடித்துவிட முடியும் என்ற நம்பிக்கையோடு பிறந்திருந்தது. தெளிவான அரசியல் நியாயங்களேவிட, திடீர்ப் போராட்டங்கள் சிலரை உற்சாகப்படுத்தும். பக்குவமில்லாமல், காலம் தெரியாமல், இடம் தெரியாமல் குதிக்கும்படி வைக்கும். ஏறக்குறைய சின்னப் பாண்டியரின் நிலே அதுதான். கம்பெனியாரை எதிர்ப்பவர்கள் யாராளுலும், அவர்கள் கைகளேப் பலப்படுத்த அவர் விரும்பினுர். அதுவும் தன்னுல்தான் முடியுமென்றும் நம்பினுர்.

ஆகவே, பெரியராணியின் வேண்டுகோளேயும் புறக்கணித்துவிட்டு, பொன்னுத்தாளேக் கூட்டிக்கொண்டு புறப்பட்டார். குதிரைவண்டி புறப்படுவதை சித்திர மேன்மாடத்திலிருந்து கவனித்த பெரிய பாண்டியர் கண்களில் கண்ணீர் வழிந்தது.

- 14 -

இதோ, ஊமையன்கோட்டை!

இரவு துவங்கிற்று. ஏராளமான இளேஞர்கள் எங்கெங்கோ மறைந்திருந்தவர்களெல்லாம் கோட்டை மைதானத்தில் வந்து குவிந்தார்கள். நிலவு பெருந்துணே புரிந்தது. ஒருவரையொருவர் முண்டியடித்துக்கொண்டு பணியில் ஈடுபட்டார்கள். விஞடிக்கு விஞடி கோட்டை ஏறிற்று. வீரத்தேவன், சிங்கத்தேவன், பொம்மையா முதலியோர் அங்குமிங்கும் ஓடி ஆணேயிட்டுக் கொண்டிருந்தார்கள். ஊமைத்துரை ஒவ்வொரு பகுதியாகக் கவனித்துவந்தார். உள்வாய்ச் சுரங்கம் மிகவும் பாதுகாப்பான முறையில் அமைக்கப்பெற்றது. அந்தச் சுரங்கத்தின் மற்ருெரு வாசல் பாஞ்சாலங்குறிச்சி நகருக்குள் இருந்த ஒரு வீட்டின் மைய மண்டபத்திலிருந்தது. இடைப்பட்ட சுரங்கப்பாதையை வெட்டுவதற்குத்தான் ஏராளமான பேர் கஷ்டப்பட்டார்கள்.

அஞ்சுகமும், சுப்பம்மாவும் பாட்டுப் பாடிக்கொண்டும், கேலி பேசிக்கொண்டும் பணியிலே ஈடுபட்டிருந்தார்கள். தங்கியிருந்த இடத்தில் அமைதி இழந்த கண்ணுத்தாள் மெதுவாக எழுந்து, கோட்டை மைதானத்துக்கு வந்தாள். எப்படியாவது சிங்கத்தேவனேயும் வீரத்தேவனேயும் தனித்தனியாகச் சந்தித்துப் பேச வேண்டுமென்று விரும்பினுள். கோட்டைவாசலுக்குக் கதவுகள் செய்யுமிடத்தருகே நின்றிருந்தான் சிங்கத்தேவன். அங்குமிங்கும் கூர்ந்து கவனித்துக்கொண்டு வந்த கண்ணுத்தாளின் கண்களுக்கு, முதலில் அவன்தான் தெரிந்தான். மெதுவாக அவன் அருகில் சென்று, அருகிலே நின்றுகொண்டாள் அவள். பாட்டும் கூத்துமாக அமர்க்களத்தோடு பணிசெய்து கொண்டிருந்தவர்கள் யாரும், இவர்களேக் கவனிக்கும் நிலேயில் இல்லே. மெதுவாக, 'அத்தான்!' என்ருள் கண்ணுத்தாள்.

சிங்கத்தேவன் திரும்பிப் பார்த்தான். குழப்ப உணர்ச்சிகள் அவனே ஆட்கொண்டன. அவளேப் பார்க்க விரும்பாதவன் போல் திரும்பி வேலேயில் ஈடுபட்டான். கண்ணுத்தாள் கலங்கினுள்.

'தவறு என்மீது இல்லே. பாளேயங் கோட்டையிலிருந்தால் ஆபத்து வருமோ என்று பயந்துதான் உங்களேத் தேடிப் புறப்பட்டு வந்தேன். வழியில் கால் வலித்ததால் சென்னகேசவ நாய்க்கன் வீட்டுத்திண்ணேயில் அமர்ந்தேன். அவன் நயவஞ்சகமாக அழைத்துச்சென்று கெடுக்க முயன்ருன். போராடித் தப்பினேன். உண்மை இதுதான். நம்புங்கள். அண்ணனேச் சந்திப்பேனென்று கனவுகூடக் காணவில்லே. இன்னும் அவருக்கு எதுவும் தெரியாது. நீங்களும் என்னே வெறுத்துவிட்டால், யாரிடம் நான் அடைக்கலம் புக முடியும்?'—என்று விம்மலோடு நிறுத்தினுள் கண்ணுத்தாள்.

அவளுக்குப் பின்னுலேயே இரண்டடி தூரத்தில் வீரத்தேவன் நின்றுகொண்டிருந்ததை அவளும் அறியமாட்டாள்; சிங்கத்தேவனும் அறியமாட்டான்.



தொடரும்

இலட்சியமும் ஆர்வமும்

"மக்கள் என்ருல் அவர்கள் வெறும் கிள்ளுக்கீரைகள் அல்ல; அவர்கள் உள்ளத்திலே ஆர்வம் எழவேண்டும்; அதற்கு நீங்கள் என்ன இலட்சியம் வைத்திருக்கிறீர்கள்?

எகிப்து நாட்டிலே நாசர் அராபியக் குடியரசு அமைப்பது என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்தார். அந்த இலட்சியத்துக்காக நாசரின் அணிவகுப்பில் மக்கள் சேர்ந்தனர்.

கஞ நாட்டின் பிரதமர், ஆப்பிரிக்கக் கறுப்பு மக்களே, ஆதிக்கக்காரர்களிடமிருந்து விடுவிப்பது என்ற இலட்சியத்தை மேற்கொண்டதனுல் அவரை மக்கள் பின்தொடர்ந்தனர்.

உங்களிடத்திலே என்ன இலட்சியம் இருக்கிறது? உங்களிடத்திலே பெருங்காயம் இல்லே—பாண்டம் இருக்கிறது; பெருங்காயம் இல்லேயாளுல் பாண்டம் பறிபோகும்.

நாட்டு மக்களின் உள்ளத்தை ஆட்சியாளர் ஆராய வேண்டும். எதிர்க்கட்சிகளே ஒதுக்கித் தள்ளிவிட்டால் மக்கள் உள்ளத்தைக் கண்டுபிடிக்க முடியாது. எதிர்க்கட்சியை மதிக்கும் தன்மை இந்த ஆட்சியினருக்கு வர வேண்டும்."

—9-2-'59 அன்று கவர்னர் உரை மீது பேசுகையில்
அறிஞர் அண்ணு.

கீழச்சிவல்பட்டிக் கவியரங்கம்

[கீழச்சிவல்பட்டி—அழகாபுரியின் தமிழ் மன்றத்தார் கடந்த 17, 18, 19-1-'59 தேதிகளில் தமிழர் திருநாள் கொண்டாடினர். 18-1-'59 அன்று நமது ஆசிரியர் தலைமையில் நிகழ்ந்த கவியரங்கத்தில் அரங்கேற்றிய கவிதை பலவற்றின் முக்கியப்பகுதிகள் சில இங்கே தரப்பட்டுள்ளன. எடுத்துக்கொண்ட பொருளும் இயற்றியவர் பெயரும் உடன் தரப்பட்டுள்ளன.]

அமைச்சு : -முரு. திருஞானம்

அரசரெல்லாம் நல்லரசராய்த் திகழவேண்டின்
அன்புடைய மக்களின் நற் றேழனுக
மரப்பாவை மனம்போலே இல்லாதாங்கே
மங்கையவள் மனம்போலே கொண்டுமேலும்
குரல்கேட்டால் அவர்நோக்கில் கருணைகாட்டி
குமுறிடுவார் மனநிலையைப் பால்போலாக்கி
இரத்தல்எனும் சொல்லின்மேல் இலக்கியத்தால்
இல்லாதே செய்திடுநல் அமைச்சர்வேண்டும்.

★

படை : -அரு. இராமலிங்கம்

நமதுபடைப் பெருமையினை நாமே சொல்லி
நாளெல்லாம் வீணாக்கிப் போக லாமோ
தமிழ்ப்படையின் பெருமையினை உலகங் காண
தகைசான்ற வாய்ப்புக்கள் எத்தனை யோஉண்டு
அமிழ்தான தமிழினது பெயரால் நாடு
அமைந்திடவே வேண்டுமெனத் திரண்டிடு வோம்வாரீர்!
குமரியோடு வேங்கடந்தான் நமதெல்லை யாக
கொடிஏந்திப் புறப்படு வோம் போர்முழக்கத்தோடு!

★

அரசு : -தில்லை. முத்துசம்பந்தன்

களிக்கின்ற இந்நாட்டின் ஆட்சி யாளர்
கடுகளவும் அதன்பொருளை உணர்ந்தார் அல்லர்
தூங்காமை என்றால் கொட்டாவி விட்டுத்
துயராலே உறங்காமை போலும் என்பார்
பாங்காகத் துணிவுடைமை என்றால் ஆகா
பளபளக்கும் துணியுடையைக் கொள்ளல் என்பார்
நீங்காத அஞ்சாமை என்றால் ஐயோ!
நிலைகெட்டே ஐந்(து)ஆமை தாமோ? என்பார்
ஈங்கேதான் ஈகையெனில் பறக்கும் ஈயின்
கையெனவே எண்ணுபவர் அரசில் உள்ளார்.

வேறு

பொருளாக்கும் வழிதம்மைக் கண்டு-நன்கு
புததியிலே அச்செறிவைக் கொண்டு
பொருள்யாவும் சிதறாமல் சேர்த்து-மேலும்
போகாத வழிதம்மைக் காத்து
வருவாயை நல்வழிக்கு வகுத்துக்-காண
வல்லதுதான் அரசெனவே தொகுத்து
மருள்நீக்கும் வள்ளுவனார் சொன்னார்–அஃதை
மணங்கொள்ளார் முடிசூடா மன்னர்.

★

மொழி : -கு. நடராசன்

அருந்தமிழன் திறம்பழித்தார் அயலாரென்னில்
அடங்காத சிற்றத்தால் கண்சிவந்து
பெரும்படையாய்த் திரண்டெழுந்த தமிழ்மறவர்
புறங்கண்டார் அன்னியரை என்றசெய்தி
வெறும்பேச்சும் அல்லவெறும் கற்பனையுமல்ல
வீண்பொழுது போக்குகின்ற வேதாந்தமல்ல
கரும்புதந்த தீஞ்சுவையாம் தாயகத்தின்ஏட்டில்
கண்டதொரு உண்மைகண்ட வரலாற்றுச்செய்தி.

★

நட்பு : -நாரா. தண்ணீர்மலை

தொழில்நடத்த வேண்டுவதும்
துயர்துடைக்க ஏற்றதுவும்
தூய நட்பின்
எழில்மிக்க பிறைமதியின்
ஏற்றமாகும்! இன்னுமது
இடுக்கண் தீர்க்க
அழிவின்கண் ஆறுய்க்கும்!
அறஞ்செய்யும்; அகம்பெருக்கும்!
அவனி யிங்கே
இழிவான செயல்நீக்கும்;
இன்பமூட்டும்; புகழ்பயக்கும்!
என்றும் வாழும்!

வேறு

மனம்பழகிப் பேசுபவர் நட்பு வேண்டும்
மாறுபட்ட தீநட்பு மாய்க்க வேண்டும்
இனமறிந்தே எந்நாளும் நட்டல் வேண்டும்
ஏற்றதொன்றே செய்தற்குத் துணிதல் வேண்டும்
பணத்தாசை— பேதையரைத் துறக்க வேண்டும்
பார்தனிலே அறிவாண்மை உய்ய வேண்டும்
குணக்குன்று, இகலாமை ஏற்க வேண்டும்!
கூடவிங்கே பகைமாட்சி அறிய வேண்டும்!
ஆராய்வு வேண்டுமென்றார் நட்பு நாட
அறியாமல் நட்பமைத்தல் ஆகா என்றார்;
சீராய்வே இல்லாத நட்பு கொண்டால்
சீக்கிரமே விட்டிடுவீர்— தொல்லை நீக்க!
போராய்வு பெற்றவரின் நட்பு வேண்டும்!
பின்னவரின் நட்புக்கே அஞ்சல் வேண்டும்!
நேராய்வு செய்திடுவீர் நட்புக் காக்க
நீங்களெலாம் நேருளச் சிற்பி யென்றால்!

★

சூழ் : -புலவர் இராமானுசன்

காணாத கைலாயப் பாதை காட்டும்இக்
கடவுளர்கள் தாம்வாழத் தம்இனமுழுதும் வாழப்
பேணுகிறார் உணவதனை என்று சொன்னார் அப்
பெருமுணவே மக்களுக்குக் கடவு ளாகும்
மாணாத மடத்தார்கள் உண்டல் தன்னை
மகேசுவர பூசையென உரைக்கின் றார்கள்
ஆணாக ஆக்குவதும் அயில்வாள் ஏந்தி
அமர்கடக்கச் செய்வதுவும் கூழே யாகும்

★

குடி : -சுப. சாத்தப்பன்

நாடுதனைக் காக்கின்ற மக்கள் சொன்னேன்
நன்றேயாம் இன்றைக்கு மக்கள் மிக்கப்
பாடுபட்டும் பலனின்றி அரைவ யிற்றுப்
பசியகற்ற முடியாத நிலையில் நின்று
ஓடுகிறார் எங்கெங்கும் பஞ்சை பஞ்சை
உதவாது இந்நிலைமை ஒழித்தல் வேண்டும்
ஆடுகிறார் பேசுகிறார் மேடை மீதில்
அவைநன்றோ! செயலினிலே காட்ட வாரீர்!

குடிகாக்கும் அரசில்லை இன்று மக்கள்
குறைஅகற்றும் அரசில்லை குற்றங் காட்டி
பிடிஇவனை உள்ளேவை என்று கூறும்
பித்தர்களின் அரசாட்சி நடக்குங் காலை
அடிமையுடன் வாழ்குடியே உண்டு வேறு
அமைதிக்கு வழியேது குடிகள் சீறும்
அடியும்வரும், பணியும்வரை! அரசு போகும்
அக்காலம் என்றுவரும் அறைதல் நன்றே!

★

அரண் : -சொ. பாலகிருட்ணன்

அற்றம் காக்கும் அறிவரணும்
அருளை வளர்க்கும் அன்பரணும்
மற்றை நாட்டார் வியப்பெய்தும்
மறவர் கூட்டம் செருஅரணும்
வெற்றிச் செயல்நூல் வள்ளுவமும்
விளங்கும் என்றன் தாய்நாட்டீர்!
கொற்றங் கொள்ளக் குறிக்கொண்மின்
கூட்டு வாழ்வே பேரரணும்!

திராவிட முன்னேற்றக் கழக இலட்சியங்களைத் தாங்கி
மார்ச் 15-ந்தேதி முதல் வெளிவருகிறது!

★ முன்னேற்றம் ★

(அரசியல் சமுதாய சீர்திருத்த வார ஏடு.)

ஆசிரியர் : பால்வண்ணன்

தனிப்பிரதி 16 காசுகள். ஆண்டுச் சந்தா ரூ. 8.
ஆறுமாதச் சந்தா ரூ. 4.

எல்லா இடங்களிலும் முன்பணம் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு :

முன்னேற்றம், 642, திருவல்லிக்கேணி ஐரோட்,
சென்னை-5.

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

ஒட்டிக்கொண்டுதான் உட்கார்ந்தான். கடைசியில் அவளும் பேசாமல்தான் இருந்துவிட்டாள்.

கோமதி உயிர்த்து உயிர்த்து ஒடுங்கினாள். மெய் சிலிர்ப்பில் விதிர்த்து வியர்த்துக் கொட்டியது. விளிம்புக்கே வந்தாகிவிட்டது. இந்தக் கட்டுமரத்தில் இதற்குமேல் நகரக் கூடவா இடமிருந்தது? உலகம் இங்கே பார்க்கவா செய்தது? கோமதி மட்டுமென்ன பார்க்கவா செய்தாள்? நான்தான் அதைப் பார்த்தேன்.

"...அலைகளைப் பார்த்தப்போ எனக்கு ஒரே திகிலாயிடுச்சி. இந்தச் சரட்டில் அப்படி என்னதான் இருக்கிறதோ தெரியவில்லை. எப்படி அழுத்திக்கொண்டேன் தெரியுமா? கதையிலே வர்ற மந்திரவாதிகளுக்குக்கூட உயிர் அவங்ககிட்டஇருக்காதாமே! மெய்தானா மச்சான்..."

நான் நெஞ்சைத் தொட்டுக்கொண்டேன். அந்தப் பரத்தி மீன் உணக்கலைக் குவியலாக்கினாள். மந்திரவாதிகள் தாமா பெண்கள்? அப்படித்தான் இருந்துவிட்டுப் போகட்டுமே! அவளுக்கு அவனை விட்டால் வேறு வழியில்லை. நிலவில் முகம் பார்க்க வேண்டாமென்று யாரும் நினைக்கவில்லை. கடலை வெறித்துப் பார்த்துவிட்டு கோமதி 'வெடுக்' கென்று எழுந்துகொண்டாள்.

"உங்களுக்குக்கூட உண்மையாகத்தான் படுகிறதா?"

"எது..."

"அவள்தான் சொன்னாளே!"

"கதையில் அப்படித்தான்"

"கதையில் வருகிற மந்திரவாதிகளுக்கு அழத் தெரியுமா?"

மணலைச் சீய்த்தவண்ணம் அவள் நடந்தாள். முகத் தோற்றத்திலிருந்து என்னால் அவளை நிதானிக்கமுடிந்தது. நான் ஒன்றும் அவளை இழுத்து வரவில்லை. நியதிகளுக்குள் ஒடுங்கிவிட்ட கோழையாக இருந்துகொண்டு நான் ஏன் அவளுடன் வந்தேன்? நானாக ஒன்றும் வரவில்லை. ஞாயிறும் திங்களும்கூடத்தான் போகிற இடத்துக்கெல்லாம் வருகின்றன. நுரையைப் பிழிந்தா நீர் வடியப் போகிறது? எல்லாம் இன்றோடு சரி. அவள்தான் எழுத்தோடு ஒலியாகப் போய்விடப் போகிறாளே! பிறகென்ன?

அந்த விளக்குக் கம்பத்தின் கீழேதான் உட்கார்ந்தாள். எதிரில் செடிகளாகவும் மரங்களாகவும்தான் இருக்கின்றன.

மூடிக்கிடந்த விழிகளைத் திறந்தாள். நான் ஒன்றும் போய்விடவில்லையே! பிறகு உலகத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பினாள்.

"நாளைக்கு எங்களை வழியனுப்ப இரயிலகத்துக்கு வருவீர்களா?"

"வரவேண்டுமென்றால் வருகிறேன்."

"எனக்கு ஒன்றும் தோன்றவில்லை."

'சரி, நான் வரவில்லை."

'பிறகு நான் அமைதியாகப் போவதற்கு வழிசொல்லுங்களேன்?"

நான் என்ன சொல்லிவிட்டேன்?

கடைசியில் அவள் ஒன்றும் பேசாமல்தான் எழுந்துகொண்டாள். இடையில் ஒரே ஓர் இரவுதான் இருந்தது. காலையில் அதுவும் போயிற்று. பிறகு ஒரு பகல் இருந்தது. இந்த மாலையின் மறைவிலே அதுவும் போயிற்று. அந்தியின் கருக்கலில் இரவு இருட்டைப் பூசிக்கொண்டது. விளக்குகள் விழித்தபோது கடற்கரை இளைத்துக்கொண்டிருந்தது. தனிமையின் அரங்கில் அலை ஒலியும், மணி ஒலியும் சூனிய உள்ளத்தில் எதிரொலிக்கத்தான் செய்தன.

கோமதிதான் வாயிற்படியில் நின்றுகொண்டிருந்தாள். ஏற்பாடுகளெல்லாம் யாருக்கும் காத்துக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. கோமதி மட்டும்தான் காத்துக்கொண்டிருந்தாள். இனிமேல் கூடவா காத்துக்கொண்டிருக்கப் போகிறாள்? போகட்டுமே; சாரலில் குளித்துவிட வேண்டுமென்று யாரும் நினைக்கவில்லை. சாரல் மட்டும் அடிக்காமலாவிட்டது? அதற்குப் பிறகுதானே அவள், உள்ளத்தைத் திறந்து காட்டினாள்!

செம்பில் நீர் கொண்டுவந்தபோதும், இலையில் நீர் தெளித்தபோதும் இருந்த தயக்கம் பிறகு எப்படிப் போயிற்றோ தெரியவில்லை. அசட்டுத்தனமாகக்கூட என்னால் சிரிக்க முடியவில்லை. அவள் சிரிக்கவே செய்தாள் சிரிக்க வேண்டுமென்றே நான் நினைக்கவில்லை. சிரிக்க வேண்டுமென்றே அவள் சிரிக்கவில்லை. இயற்கையாகவேதான் சிரித்தாள்.

"என்னங்க..."

'ஒன்றுமில்லை"

"சாப்பிடவாவது வாயசைகிறதே! விக்கல் எடுத்தால்கூடத் தண்ணீர் கேட்கமாட்டீர்கள் போலிருக்கிறதே!"

"வேடிக்கைதான்"

"என்ன வேடிக்கையைக் கண்டுவிட்டீர்கள்?"

"இப்படியா நீரை வழிய வழிய ஊற்றுவார்கள்?"

"என்ன செய்வது? நிரம்பினால் வழிகிறது!"

நான் திகைத்துவிட்டேன். இன்னுமா வடியவில்லை? நாவசைவுக்குக்கூட இடமில்லை. ஆடி மாதத்தின் ஒரு பொழுதில் அடித்த சாரலில் நனைந்த பிறகு அவள் எப்பொழுது இப்படிப் பேசினாள்? இதற்குமேல் அவள் என்ன சொல்லப் போகிறாள்? அதற்குப் பிறகு அவள் பேசவேயில்லை. நானும் ஊமையாகத்தான் இருந்துவிட்டேன்.

மணிப்பொறிக்கு ஓய்வில்லை. இன்னும் கொஞ்ச நேரத்துக்குப் பிறகு இங்கே என்ன இருக்கப் போகிறது? இருளும் ஒளியுமற்ற ஒளியும் இருளும் என்று சொல்லிக்கொள்ளலாம். பனி மண்டலத்தில் அந்த நிலவு, ஒளியைக் குழைத்துக்கொண்டிருக்கிறது. ஒலியவிந்த யாமங்கள் மெல்ல மெல்ல இமைக்கத்தான் செய்கின்றன. சூனியத்தில் மேய்ந்துகொண்டிருந்த நிலவு முகிலில் படுத்துவிட்டது.

வரையறுத்து இலக்கணம்சொல்ல முடியாத இலக்கியங்களுக்கு, அந்த இலக்கியங்களே தாம் இலக்கணம் என்றால், அழகுகூட அப்படித்தானே!

ஆனியின் அந்தத் திருமஞ்சன யாமத்தில் ஏற்றி வைத்த சுடர், கனிந்த ஒளியைச் சிந்திக்கொண்டிருந்தது. வெள்ளையான தாழையும், மணம் தூங்காத தாழையுமாக; ஒல்கிய நடையும் ஓசைபடாத நடையுமாக அவள் வந்தாள். பிறகு நான் சிந்திக்கவா செய்தேன்? உலர்ந்துவிட்ட எழுதுகோலை உதறி உதறி கை வலி கண்டதுதான் மிச்சம்.

இலக்கணமற்ற அழகாக வந்த அவள், 'டிக்'கென்று தட்டினாள்.

"மையில்லாமல் எழுதமுடியுமா? இப்படிக் கொடுங்கள். மைபோட்டுத் தருகிறேன்?"

"இல்லை, நான் போட்டுக்கொள்கிறேன்."

"பரவாயில்லை. எனக்கும் போடத் தெரியும்."

அவள் எதற்கும் தயங்கவில்லை. மை ஊற்றிக் கொடுத்துவிட்டு எழுதச் சொன்னாள். எழுத்தின் திவலைகூடப் புலப்படாத நிலையில் நான் எதை எழுதப் போனேன்? அவள் நின்று கொண்டுதான் இருந்தாள். நிற்கமட்டுமா செய்தாள்? பஞ்சுக்கு நூலாகவேண்டுமென்றுதான் ஆசை. அதைத்தான் நனைத்தாயிற்றே! நெளிந்த புருவங்களும், நெட்டையின் முறிவும் தடுமாறிய நிலையில் அவள் கேட்டாள். எனக்கு வியப்பாக இருந்தது. என்றைக்கு நான் இவளிடம் பேசவில்லை?

"அந்தப் பேச்சையா கேட்டேன்?"

"வேறென்ன பேசவேண்டும்?"

"என்னைக் கேட்டால்?"

"எனக்கு ஒன்றும் புரியவில்லை."

"எனக்கும்தான் புரியவில்லை."

முறுக்குடைந்ததைப் போல் இருந்தது எனக்கு. அவள் உறைந்து போய் நின்றாள். முத்துக்கொட்டை வெடித்தால், விதை எங்கே விழுமென்று யாருக்குத் தெரியும்? அது இங்கே விழுந்தது. சுற்றிக்கூட இப்படிப் பேச அவளால் எப்படித்தான் முடிந்ததோ தெரியவில்லை. அந்தத் துணிச்சலை நான் எப்படித்தான் நினைத்தேன்? நிமிர்ந்தபோது சுவடு தெரியாமல் அவள் போய்விட்டிருந்தாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

பிறகு புரியாமலில்லை.

ஒளியணைந்த இருளில் உற்றுப் பார்த்தால் தெரியுமே, அந்த ஒளியில் அவள் நின்று புழுங்கினாள்.

"இங்கே பாருங்கள்."

"........."

"உங்களைத்தான்."

"........."

"யாருமில்லை..."

"........."

"...நான்தான்."

"........."

"தெரியவில்லையா?"

"........."

"பேசவே மாட்டீர்களா?"

"........."

"உங்களைத் தான்."

"........."

"அழவேண்டுமென்றால் அழுது விடுகிறேன். எதற்கு இப்படியெல்லாம் சோதனை செய்யவேண்டும்?"

"........."

"இப்பொழுது சொல்லுங்கள். நான் எழுத்துக்கேற்ற ஒலிதானா?"

"........."

"நீங்கள் பேசமாட்டீர்கள். நீங்கள் ஏன் பேசவேண்டும்? நான் ஒருத்திதான் மிருகம். நான் ஒருத்திதான் இன்னும் ஊமையாகவில்லை..."

"........."

நீங்கள் ஏன் விம்மவேண்டும்?"

".........?"

"எனக்காக நான் ஒருத்தி அழுதால் போதும். நீங்கள் அழவேண்டாம். ஐயோ, அழாமலிருங்களேன்."

"........."

"நீங்கள் பேசக்கூட வேண்டாம். அழாமலிருங்கள்; நான் போய்விடுகிறேன். யாரையும் நான் பழிக்கவில்லை. நியாய அநியாயங்கள் என்னை மட்டும் குதறித் துப்பிவிட்டுப் போகட்டும். சூனியத்தில் பாயும்வரைதான் சூனியத்துக்கு ஒளி சொந்தம் என்று எனக்குத் தெரியாமலில்லை. ஒளிக் கதிரை முடித்துக்கொண்டு, ஒளி மண்டிலத்துக்குப் போய்விட யாரும் நினைக்கவில்லை. நீங்களெல்லாம் இருக்கும்போது எனக்குமட்டும்தானா முடியாது?"

"........."

"தூய தந்தத்தைப் பொடிசெய்ய வேண்டுமென்று எண்ணமில்லை. வீசும் மண் துளிகளில் விளையவேண்டிய பயிரை, விழியின் துளிகளில் விளைக்கவா நினைக்கிறேன்? ஒன்றுமில்லை. நீங்கள் பேசுங்கள்; நான் போய்விடுகிறேன்."

"எதைப் பேசவேண்டும்? எதைப் பேசச் சொன்னாலும் பேசுகிறேன். எதைச் செய்யச் சொன்னாலும் செய்கிறேன்."

"உண்மையாகவா?"

"எனக்கு யார்மீதும் கோபமில்லை."

"சொல்லட்டுமா?"

"யாரையும் நான் கட்டுப்படுத்தவில்லை."

"உங்களை நான் என்ன செய்யச் சொன்னேன்? உங்களை எனக்குத் தெரியாதா? 'பேசுங்கள் பேசுங்கள்' என்றதைத் தவிர என்ன செய்துவிட்டேன்? படகு நிலவில் அமர்ந்து துடுப்பு வலிக்க முடியாவிட்டாலும் **பார்க்கக்கூடவா கூடாது?** எனக்காக நீங்கள் இனிமேல் எதையும் செய்ய வேண்டாம்; எதையும் பேச வேண்டாம். கொடுத்துவைக்காதவள், கொடுத்துவைக்காதவளாகவே இருந்துவிடுகிறேன். நீங்கள் பேசாமல் தூங்குங்கள்."

இடிமின்னல் இல்லாத மழையாகப் பெய்துவிட்டு அவள் போய்விட்டாள். மலரை நினைத்து மலரை நுகரும் இந்த மனோதத்துவம் எனக்குப் புரியாமல் தான் இருந்தது. எதை நினைத்து என்ன செய்ய இருக்கிறது? ஒரு வேளை, நான் மூத்த குஞ்சாக இருந்திருந்தால்கூட இப்படித்தான் நடந்திருக்குமோ என்னவோ?

அம்மாதான் அழுதாள். ஆறேழு ஆண்டுகள்வரை அழுதாள். அப்புறம் அவளும் நிறுத்திக்கொண்டாள். காலத்தின் வேகம் தெரியாமல் போயிற்று. இடையில் வந்து போன குஞ்சுகள் அடைகாத்துக்கொண்டிருந்தன. கடைக்குஞ்சாக இருந்துகொண்டு நான் பேசாமல்தான் இருந்தேன். யாருக்குப் போய் யார் புத்தி சொல்வது? கடைசியில் ஞானம் உதயமாயிற்று.

காற்றுக்குச் சாவில்லை
'கண்ணே-செங்
கதிருக்கு மூப்பில்லை
சொன்னேன்.

என்று வரிக்கானல் இசைக்கும் வயதா அது?

அம்மாதான் ஒரே வழியாக ஆரவாரித்தாள். பழுப்பைப் பார்த்துக்கொண்டிருந்த பிரம்மச்சரியத்தைத் தரிசிக்கத்தான் கோமதி வந்துவிட்டாளே! பிறகு நான்தான் என்ன செய்துவிட்டேன்? அறையைத் தாழிட்டுவிட்டு உலகத்தை நினைத்துப் பார்க்கத்தானே முடிந்தது. எல்லாம் பழங்கதைதான்.

வெளியில் வண்டி வந்து நின்றது. முற்றம், பரபரப்பில் மூழ்கிக் கிடந்தது. கோமதி கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து நாற்காலியில் உட்கார்ந்தாள். இரவின் முன் யாமத்தில் நீரை வழிய வழிய ஊற்றியவளாக இல்லை அவள். பனிவெளியில் ஒளிரும் சுடராக அவள் காட்சியளித்தாள்.

— 4-ம் பக்கம் —

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

வருவாய்த் துறையைக் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பயன்படுத்தவில்லை என்பதும் டாங்கே மீது ஒரு குற்றச்சாட்டு-இதற்கென்ன விளக்கம்-மறுப்பு என்று அன்றே கேட்கப்பட்டது! வருகிற பணம் எங்கே போகிறது? ஏன் போகிறது? என்பதைத் தெரியாமல் டாங்கேமட்டும் தனிமைப்படுத்திக்கொள்கிருர் என்பதாலேதான் கட்சிக்குள்ளே தகராறு என்று 'கரண்ட்' சொன்னது-இதனை மறுக்கத் திராணியற்றுப் போனவர்கள் தென்றல் ஆசிரியருக்குப் பொருளாதாரம் தெரியாது; தொழிற் சங்க இயக்கம் பற்றி எதுவும் தெரியாது எனக் குறிப்பிடுவது கம்யூனிஸ்ட் கட்சியைக் காப்பாற்றும் ஆதாரமாகுமா? உலகத் தொழிற் சங்கத்திலேயிருந்து கம்யூனிஸ்ட் தலைவருக்கு மாதா மாதம் கிடைக்கும் பணத்தைப்பற்றி பேசுகின்ற நேரத்தில் இதனைப் பெரியதாக்கிப் பேசுவது போலவே அமெரிக்கத் தொழிற் சங்கங்களிலிருந்து இந்திய தேசியத் தொழிற் சங்கக் காங்கிரசிற்குப் பணம் வந்ததை நாங்கள்தான் பிடித்துக் கொடுத்துப் பார்லிமெண்டிலே பேசினேம் என்று இன்னொரு செய்தியை உரைகல் எழுத்தாளர் எடுத்துக்கொடுக்கிருர்-சரி அதனைப் பாராட்டுவோம்! ஆனல் அதற்காகக் கம்யூனிஸ்ட்களும் உலகத் தொழிற் சங்கப் பணத்திலே திளைத்து உயிர் வாழ வேண்டுமென்று கட்சியிலே ஏதாவது கொள்கை நிர்ணயம் உண்டா? டாங்கே விவகாரம்-5000 ரூபாய்ச் செய்திகளுக்கு விளக்கம் கேட்பது தென்றல்-ஆனல் கம்யூனிஸ்ட்கள் பதில் கேள்வி கேட்பது அறிஞர் அண்ணா அவர்களிடம்! அவர் மத்திய சர்க்கார் மந்திரிகளுக்கும் தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் கடிதம் எழுத வேண்டுமாம்! அதிலிருந்து சர்க்கார் பணம் வருவதைக் கண்டுபிடித்துத் தடுத்துவிடுமாம்; கம்யூனிஸ்ட்கள் தப்பிப் பிழைத்துவிடுவார்களாம்! இதுவா ஒரு கொள்கைப் பிடிப்புள்ள கட்சிக்குள்ள குறிக்கோள்? இருட்டிலே மறைந்துவிடும் திருடர்களுக்குத்தான் சர்க்காரின் கண்காணிப்புத் தேவை-கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பணம் வருகிறதோ இல்லையோ உங்களுக்குத் தைரியமிருந்தால் சர்க்காருக்குக் கண்டுபிடித்துக் கொடுங்கள் என்று கட்சிப் பத்திரிகை சொல்வதும் - சாதாரணத் தோழர்கள் 5000 அல்ல 500 தான், அலவன்ஸ் அல்ல-மாஸ்கோ போய் வரக் கடனுக வாங்கியதுதான் என்று கூறுவதும் எந்த ரகம்?

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் டாங்கேபற்றிய குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் தரவேண்டுமென்று கம்யூனிஸ்ட் வட்டாரத்திலேயிருந்து ஒரு கேள்வி கிளம்புகிறது. டாங்கேக்குப் பணம் வரும் செய்தி கம்யூனிஸ்ட்களிலேயே பலருக்குத் தெரியாத செய்தி. செயலாளர் சிவஸ்தவாவுக்கும் இதுவரையிலும் புரியவில்லை. 'தென்றல்' பிரச்னையை விளக்கிய போதும் கம்யூனிஸ்ட் கட்சியினர் சரியான சமாதானம் தர வேண்டுமென்றுதான் கேட்கப்பட்டது. எங்களுக்குப் பணம் வந்து அதனை டாங்கேயிடம் நாங்கள்தான் கொடுக்கிறேம் என்று சொல்லவில்லை! கரண்ட் ஆசிரியரும் தென்றல் ஆசிரியரும் டாங்கே 5000 ரூபாய் வாங்குவதைத் தெரிந்துகொண்டார்கள்.

ஸி. ஐ. டி. புலிகளுக்குத் தெரியாமல் என்று ஜனசக்தியார் வருத்தப்பட்டுக்கொள்வதிலே பலனில்லை! பாராளுமன்றத்தில் ஒரு தலைவராக, கம்யூனிஸ்ட்களின் கண் கண்ட கடவுளாக இருக்கும் டாங்கே ஏன் இந்த 5000 விசயத்தில் நிரந்தர ஊமையாக இருக்கிருர்? அண்ணா மந்திரிகளுக்குச் சொல்லட்டும் என்று சுலபமாகப் பேசுகிறவர்கள் ஏன் இதனை டாங்கே அவர்களிடம் நினைவூட்டி மறுப்புரையைத் தரக்கூடாது? அநுமட்டும் போதாது. மானமிழக்கும் வகையில் செய்திகளைத் தந்த 'கரண்ட்'மீது ஏன் வழக்குத்தொடரக்கூடாது? வழக்கு விவகாரம் வந்துவிடுமென்று பயந்துதான் வார்த்தைகளைத் தந்திரமாகப் பயன்படுத்தியிருப்பதாகவும் மாஜினியார் கருதுகிருர். அவ்விதமானல் காரகாவைக் கூண்டிலே நிறுத்த ஏனிந்தத் தயக்கம்? மாஸ்கோவிலிருந்து டாங்கேயும் அஜய்கோசும் திரும்பி வருவது இப்போது இல்லையென்ருல் தமிழ்நாட்டுக் கமிட்டி வெங்கட்டராமன் வராது போனலும் 'ஜனசக்தி'க்காரர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்களா? தென்றலுக்கு அறைகூவல் தரும் அப்பாவித் தோழர்கள் ஆதாரம் வாங்கித் தாருங்கள் என்று ஆசிரியரைக் கேட்கின்ற கம்யூனிஸ்ட்களே! எங்களைக் கேட்க வெட்கமாக இல்லையா? உங்களுடைய பத்திரிகை 'நியூ ஏஜ்' பம்பாயிலிருந்து வெளி வருகிறது-அதிலே பி. ஸி. ஜோஷியை அறை கூவி எழுதச் சொல்லுங்கள்-"கரண்ட் ஆசிரியரே! காரகாவே! ஆதாரங்களை வெளியிடு அல்லது மன்னிப்புக் கேள்" என்று! தென்றல் பேசுவதைப் பொறுக்க முடியவில்லையென்ருல் நீங்கள் புயலாக வீசுகின்றதே என்று புழுங்கிச்சாக வேண்டுமே தவிர வாரித் தூற்றித் தென்றலின் தொண்டைத் தடுத்துவிடமுடியாது!

தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் 'தென்றல்' கரண்ட் ஆசிரியரிடமிருந்து ஆதாரங்கள் வாங்கித் தரவேண்டுமென்பதை மறந்துவிட்டு அது முற்றிலும் 'தென்றலு'க்கு வேண்டாத வேலையானதால், மதுரைவீரக் கம்யூனிஸ்ட்கள் பம்பாய் தொழிற்சங்கத்திற்கு எழுதியிருக்கிறேம் என்று கட்சித் தோழர்களை ஏமாற்றுவதுபோலச் சொல்லித்திரியாமல் சரியான முறையில் செயல்படத்துணியட்டும். தங்கமணி மோகன் போன்ற பார்-அட்லாக்களிடம் பொருத்தமான ஆய்வுரைகள் பெற்றுக்கொண்டு தென்றலைத் தீயெனக் கடிந்துகொள்ளுவது நல்லது! உரைகல் தோழர் சொல்லும் இன்னெரு குற்றச்சாட்டு கரண்ட் 5000 ரூபாய்ச் செய்தியை திட்டவட்டமாகக் கூருமல் விட்டிருப்பதாகத் தெரிவிக்கிருர். அதனையும் பரிசோதித்துப் பார்ப்போம்! "Speculations are rife here—பலத்த வதந்திகள் உலவுகின்றன"-இது 'கரண்டி'ல் வெளிவந்துள்ள முறையைத் தருகிறேன். "Speculations are rife here that Dange is not altogether 'Safe' in Moscow."—29-10-58 இதழில் உள்ள இந்த வாக்கியம் முடிந்துவிட்டு, மேலும் தொடருகிறது.

"He has been drawing an allowance of about Rs. 5000 a month from the W. F. T. U."—அந்தப் பாராவின் கடைசி வாக்கியம். "பலத்த வதந்திகள் உலவுகின்றன" என்ற வார்த்தைகள் இந்த 5000 செய்தியில் வந்து இணையவில்லை. மாஜினியார் எடுத்துக் காட்டும் Reports have it என்ற தொடரும் டாங்கே பெற்றுக்கொள்ளும் ரூ 5000 அலவன்ஸ் தொகைக்குத் துணையாக இல்லை! "Reports have it that the two former General Secretaries of the Party" என்று துவங்கி பி. ஸி. ஜோஷி, பி. டி. ரணதிவே இருவரும் தோழர் டாங்கேயைக் கட்சி நிர்வாகத்திலிருந்து கீழே இறக்க முயற்சி செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. இதைப்போலவே Several stories are in circulation (பல விதமாகக் கூறப்படுகின்றன) என்ற ஆங்கிலத் தொடரும் டாங்கேக்கும் ரூபாய் ஐயாயிரத்திற்குமுள்ள தொடர்பை தெரிவிக்கவில்லை. சரியான வாக்கியத்தைப் பாருங்கள்—

"Recently, however, several stories are in circulation about the critical condition in which Mr. Dange was when he left India."—என்பதாகும். உரைகல் மாவீரன் அறைகூவலையெல்லாம் தந்துவிட்டு வெறும் வார்த்தை ஜாலங்களை மண் குதிரையாக நம்பி, 'தென்றல்' அவதூறில் இறங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். மூன்று வகையான செய்திகளைக் குறிக்கும் ஆங்கிலத் தொடர்களை அவர் விருப்பம்போல் எழுதி, இவைகள் எல்லாம் டாங்கே ரூபாய் 5000 பெற்றுக்கொள்கிருர் என்பதனைத் திட்டவட்டமாக் கூறவில்லை என்று துணிந்து சொல்கிருர்! அவருக்கு நிச்சயம் தெரியும் எந்தக் கம்யூனிஸ்ட் தோழனும் 'கரண்ட்' பத்திரிகையை எடுத்து வைத்துக்கொண்டுவார்த்தைகளை ஆராய்ச்சி செய்து தன்னிடம் வாதாட வரப்போவதில்லையென்று! ஒரு கம்யூனிஸ்ட் உதவி ஆசிரியர் கம்யூனிஸ்ட்களை ஏமாற்றுகிருர், பொய்யான சேதிகளைச் சொல்லி! உண்மையை விளக்கி எடுத்துக் கூறும் கடமை கழகத்துத் 'தென்றலுக்கு' இருக்கிறது! காம்ரேடுகள் கேட்கிருர்கள் "இதுதான் கண்ணியமா?" என்று. ஆம்! கருத்துக்குலைந்த உங்கள் கவனத்தைச் சரி செய்து தருவது உண்மையிலேயே கண்ணியச் செயல்தான்! அரசியலில் அறிவுரைக் கூறத் தகுதி படைத்தவர்கள் கம்யூனிஸ்ட்கள்தான் என்று ஒத்துக்கொள்ள எந்தக் கழகத் தோழனும் தயாராக இல்லை; கலைஞருக்குப் பஞ்சாலைச் சங்கம் பற்றிப் பேசத் தெரியாது-கவிஞருக்குப் பொருளாதாரம் தெரியாது—நாவலருக்குப் புள்ளி விபரம் தெரியாது—அறிஞருக்கு அரசியல் தெரியாது என்றெல்லாம் சொல்லடுக்கும் வீரர்களே! நீங்கள் பத்திரிகா தர்மத்தையும் ஜனநாயக மரபையும் எங்களுக்குச் சொல்லித் தர முன் வருவது தகுமா? உங்களை நீங்களே எண்ணிப் பாருங்கள்-எல்லோரையும்போல எங்களையும் எண்ணி ஏமாந்துவிடாதீர்கள்! ★

...கூலிக்குக் கொடிபிடிப்பவர்கள் என்ருல் கோபப்படுவது ஏன்? ...

? வினா – விடை

கூடலரசன் பதிலளிக்கிறார்

லெ. தங்கவேல், ஒரத்தநாடு.

குருஷ்சேவ் சர்வாதிகாரியா சனநாயக வாதியா ?

சந்தேகமின்றி - சம்மதிக்கப்பட்ட சர்வாதிகாரி !

★

இரா. ப. வேலவன்

'ஆகாஷ்வாணி', என்ற பெயரைக் கண்டித்துக் கம்யூனிஸ்ட்கள் பேசாதது ஏன் ?

பேசியிருக்கிறார்கள் ! சங்கரய்யா என்ற கம்யூனிஸ்ட் சொன்னார் 'ஆல் இந்தியா ரேடியோ' இருந்தது போல் 'ஆகாஷ்வாணி'யும் இருக்கலாம் என்று ! அவர் மிகப் பெரிய மொழி வல்லுனரானதால் 'வானொலி' என்பது தமிழ் அல்ல என்றே சொல்லிவிட்டார். ஜீவானந்தம் அவர்கள் சங்கரய்யாக்களுக்கு பாடம் புகட்டுவாராக !

★

எ. கே. சாமி, கரூர்.

கரூர் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் திருச்சி பீடித் தொழிலாளர் போராட்டத்தில் முன்னேற்றக் கழகம் தவறு செய்துவிட்டதாகப் பேசினார்கள்-பதில் என்ன ?

திருச்சி பீடித் தொழிலாளர் போராட்டம் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளர்ச்சியாக இருந்து சர்வ கட்சியாக மாற்றப்பட்டது. தலைமை நிலையத்தின் இசைவுடன் திருச்சி நகரத்தில் செயலாற்றத் துவங்கிய வேளையில் தான் பீடித் தொழிலாளர் குரல் வலுத்தது. முதலாளிகள் சமரசத்திற்கு முன் வந்தனர். பொது வேலை நிறுத்தத்திற்கு நாள் குறிப்பிடப்பட்டது. சென்னை சென்ற நாவலரும் கலைஞரும் திருச்சி திரும்புவதற்கு முன்பே, கல்யாணசுந்தரம் போன்ற கம்யூனிஸ்ட்கள் இரண்டணாக் கூலி உயர்வை கிடைத்ததற்கரிய வரமாக எண்ணிப் போராட்டத்தை நிறுத்தி விட்டார்கள் ! இதனைக் கண்டித்து, அரசியல் நேர்மையற்ற தன்மையை விளக்கி நாவலரும் கலைஞரும் அறிக்கை தந்தனர். அதனைக் கண்ட கம்யூனிஸ்ட்கள், அதற்குப் பதில் அறிக்கை கல்யாணசுந்தரம் தருவார் என்று அறிவித்தார்கள் ! ஆனால் அவர்களுடைய உள்ளங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூய பணியை மறக்காமல் இருப்பதால்தான் தூற்றல் அறிக்கையை தாங்கள் அறிவித்தபடி இன்றுவரை தரவில்லை ! கழகம் தவறு செய்தது உண்மைதான்- என்ன தவறு? தனக்கே உரிய சிறப்புப்படி, கம்யூனிஸ்ட் கல்யாண சுந்தரங்களிடம் 'கோஷா'க்களாக ஏமாறவில்லை !

★

கா. இராசகோபாலன்,
திருச்சி.

மார்க்சிசம் பேசும் கம்யூனிஸ்ட்கள் உண்ணா விரதம் இருப்பது சரியா ?

உங்கள் வினாவே தவறு, நண்பரே. கம்யூனிஸ்ட்கள் *மார்க்சிசம் என்ற வார்த்தையை அடிக்கடிப் பயன்படுத்துகிறார்களே தவிர, தங்களை நம்பியிருக்கும் தொழிலாளத் தோழர்களிடத்தில் 'மார்க்சிசம்' என்ற தத்துவத்தின் எல்லா வகையான இலட்சியத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியின் எந்தப் பேச்சாளராவது எடுத்து விளக்கியிருக்கிறாரா? மார்க்சின் போதனைகளிலே உண்ணாவிரதம், விநாயகர் விழா, சரஸ்வதி பூஜை முதலியவைக்கு 'ஜனசக்தி' விடுமுறை பெற வேண்டும் என்பதெல்லாம் இல்லையே ! இந்தியக் கம்யூனிஸ்ட்கள் காந்தியாருடைய உண்ணா விரதத்தைக் கண்டித்தவர்கள். ஆனால் அனந்தன்கள் 'நம்பியார்களாக' விளம்பரம் செய்துகொண்டு பொருந்தாத வகையில் உண்ணா விரதம் இருந்தார்கள். அதனை 'அய்யர்'களும் 'அய்யங்கார்'களும் ஆதரித்தார்கள் !*

★

பி. ஆரோக்யசாமி,
தூத்துக்குடி.

தூத்துக்குடிக் கம்யூனிஸ்ட் செயலாளர் பீட்டர் மொருயிசைக் கிருத்துவ மதத்திலிருந்து விலக்கியதற்காக பாதிரிமார்கள் மீது வழக்குப் போட்டிருக்கிறார்கள்- இதைப்பற்றி தங்கள் கருத்தென்ன ?

கம்யூனிஸ்ட்களுக்கும் கம்யூனிசத் தத்துவங்களுக்கும் தொடர்பில்லை என்பதை, பீட்டர் நிரூபித்துவிட்டார் ! மதம் மக்களுக்கு அபின் என்று சொன்னவன் மார்க்ஸ்- அவன் பெயர் கூறிப் பிழைப்பவர்கள் கிருத்துவ மதத்தில் அடிமையாக இருப்போம், மதத் தொடர்பற்ற சுதந்திர மனிதர்களாக இருக்க நாங்கள் இலாயக்கற்றவர்கள் என்று பாதிரிமார்களிடம் தஞ்சமடைந்திருக்கிறார்கள் ! 'குடியரசு' இதழ்களைத் தன்னிடம் வைத்துக்கொண்டிருப்பதினாலேயே தன்னையும் ஒரு பழம் பெரும் சுயமரியாதை இயக்கத்தவன் என்று ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்லிக்கொள்ளும் 'சிவானந்தங்கள்'-பீட்டர் மொருயிஸ்களுக்காகக் கண்ணீர் வடிக்கிறார்கள். கத்தோலிக்க மதப் பிரியர்கள்தான் கம்யூனிஸ்ட்களாம். இந்தப் போலிகளுக்குப் புகலிடம் தர ஒரு கட்சியும் இருக்கிறது !

★

எஸ். ஆர். வி. நாதன்
கோவை;
அன்பரசு, மேட்டுப்பாளையம்.

கலைஞர் கருணாநிதி பஞ்சாலைச் சங்கம் பற்றி பேசத் தெரியாது என்று சொல்லிவிட்டதால் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்கவென்று மதுரைக் கழகத் தோழர்கள் சொல்லி விட்டார்களாமே ! உண்மையா ?

தூத்துக்குடியிலேயிருந்து சென்னைக்குப் போய் மதுரைத் தோழர்களைப் பற்றிப் பேசினால் யார் எதிர்த்துக் கேட்கப்போகிறார்கள் என்ற துணிவு இருந்ததினால் அந்தப் 'பிள்ளையார்' இந்தப்பெரும் பொய்யைச் சொன்னார் ! கழகத் தோழர்கள் கலைஞரைப் பற்றி கம்யூனிஸ்ட்களிடம் கேட்டா தெரிந்து கொள்ளவேண்டும்? கம்யூனிஸ்ட்கள் என்றைக்காவது கழகத்தலைவர்களுக்குப் பேசத் தெரியும் என்று ஒப்புக் கொண்டதுண்டா? கலைஞருக்குப் பேசத் தெரியாது என்று சொன்னால் கைதட்டுவதற்கு ஜனசக்தி வட்டாரத்திலே ஆட்கள் உண்டு ! இதற்காகச் சொல்லப்பட்டதாகும் தாங்கள் கேட்கும் செய்தி. நீங்கள் நம்புகிறீர்களா ?

★

பி. அன்பு, ஆத்தூர்.

கம்யூனிசக் கழுமரங்கள் விடுதலை உணர்ச்சியின் பலிச் சின்னங்கள் என்பது உண்மையா ?

டிராட்ஸ்கி, இம்ரேநாகி போன்றவர்களின் பிணங்களைக் கம்யூனிஸ்ட் 'கழுமரங்கள்' தான் தயாரித்துக் கொடுத்தன. விடுதலை உணர்ச்சிக்கு அருகிலேயே பலிச்சின்னமும் தயாரிக்கப்படுவதே இதனை உண்மையென்று தெரிவிக்கிறது ! புடாபெஸ்ட் நகரத்து வீதிகளிலே நின்று "நாங்கள் எல்லாம் அங்கேரியர்கள் – கம்யூனிஸ்டுகளே எங்கள் நாட்டைவிட்டு வெளியேறுங்கள்" என்று போர் முழக்கமிட்டவர்கள் எல்லா ஆடவரும் பெண்டிரும், டாங்கிகள் போன்ற 'கழுமரங்களுக்குத்' தப்பிப் பிழைத்தவர்கள் தான் !

★

டி. மணிவேந்தன்,
அய்யாபுரம் (நெல்லை)

பாகிஸ்தான் பிரிவினையில் கண்ணோட்டம் மாற்றிக்கொண்ட கம்யூனிஸ்ட்கள் திராவிடம் பிரிவதை எதிர்ப்பது ஏன் ?

சுதந்திர உணர்ச்சியை இழந்த மரக்கட்டைகளாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். தாயகப்பற்று அவர்கள் இதயத்திலே இல்லை !

★

இரேவதி, சூலூர் (கோவை)

இலட்சியமும் கொள்கையுமில்லாமல் முன்னேற்றக் கழகம் தொழிற் சங்கம் ஆரம்பித்திருப்பதாக கம்யூனிஸ்ட் ஒருவர் பேசினார். இதுபற்றி என்ன கூறுகிறீர்கள் ?

திராவிட முன்னேற்றக் கழகம், தொழிற் சங்கப் பெயர் இருந்தால் தான் தொழிலாளர்களுக்குப் பணி செய்ய இயலும் என்று எண்ணவில்லை. கழகம் தொழிலாளர் நலன் பேணத் தவறியதில்லை. கம்யூனிஸ்ட்கள் நடத்திய கிளர்ச்சிகளில் தடையாக நின்றதில்லை கழகத்தவர். கம்யூனிஸ்ட்களிலே தான் கருங்காலிகள் தோன்றியதுண்டு ! அண்மைக் காலத்தில் தொழிலாளர் பிரச்னைகளில் சட்ட அமுல்சங்கடங்கள் இருப்பதினால் கழகத்தவர் தனியான அமைப்பை உருவாக்க நேரிட்டுள்ளது. கம்யூனிஸ்ட் சங்கம் கல கலக்கின்ற காரணத்தினாலே கலங்கித் தவிக்கும் கம்யூனிஸ்ட்கள் கழகத்தின் தொழிலாளர் நலன் நாடும் முயற்சியை இப்படிப் பொய் கூறி மறைக்க நினைக்கிறார்கள். இது அவர்களுக்கு அழிவு காலம். அந்திம நாட்களிலே தற்காலிகமாகப் பிழைத்துப் போகட்டும் !

★

அ. நா. ருக்குமணி,
இராசிபாளையம், கோவை.

பெயர் மாற்றம் செய்துகொள்ளும் கழகத் தோழர்களைக் கம்யூனிஸ்ட்கள் ஏன் கிண்டல் செய்கிறார்கள் ?

நம்பூதிரி, நம்பியார், நாயர், அய்யங்கார் என்று சாதிப் பெயர்களையும், ஜானகி, ஜீவானந்தம், என்று வடமொழிப் பெயர்களையும் வலிய இணைத்தும் அணைத்தும் பெருமைப் படுகிறவர்கள், இனியதும் சிறந்ததுமான தூய தமிழ் மணக்கும் பெயர்களைக் கிண்டல் செய்கிறார்கள் என்றால் நிச்சயம், 'கீழ்ப்பாக்கத்தில்' இடம் தேவை !

★

எம். கே. சிந்தா,
தாராவி, பம்பாய்.

அண்மையில் வெளி வந்துள்ள 'தி. மு. க. எங்கே செல்கிறது' என்ற புத்தகத்தைப்பற்றி தங்களின் எண்ணம் என்ன ?

எடை போட்டால் வெறும் உளுத்துப் போன கருத்துக்கள்; மறுக்கப் படை தேட வேண்டியதில்லை. விடை தருவோம்; எதிர் பாருங்கள் !

★

வி. கோ. துரைச்செல்வம்,
வேலூர்.

கம்யூனிஸ்டு தலைவர் கே. டி. ராஜு, "எப்படியும் தி. மு. க. வளர்ச்சியைத் தடுத்தே தீருவோம்" என்று பேசினார். உட்பொருள் என்ன ?

தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் கழகத்தை எதிர்ப்பதென்றால் துணிவு நிறைய வருகிறது. தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் தங்களின் தரம் தாழ்த்திக் கொள்கிறார்கள் இப்படியெல்லாம் எச்சரிக்கைகள் அனுப்புவதின் மூலம் ! "எப்படியும்" என்றால், நம் கூட்டங்களில் கல்லெறிவது ! சென்ற கிழமை நான் ஒரு நாடகத்திற்குத் தலைமை வகித்தேன், டாங்கே எங்கே? ஐயாயிரம் எங்கே? என்று தெரியாதவர்கள், நாடகம் நடைபெறத் தடையாக நின்றார்கள். தோழர் ஒருவரை அடித்தார்கள். இது ஒரு சான்று. கே.டி.ராஜு இது போன்றவற்றைத்தான் "எப்படியும் தடுப்போம்" என்றார் போலும் !

விருத்தப் போட்டி

மோது களத்திடை வேல்கள் துளைத்திட
மார்பில் வடுக்களை ஏந்தி
வீதி நனைந்திடச் செந்நீர் தெளித்திளம்
வீரன் நடக்கையில் அந்தோ!
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
வேது கொடுத்தது போல உளதென
வீரன் விளம்பினன் மெய்யோ?
—பெரு. இராமச்சந்திரன், மேலூர்.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
ஓதல் மறந்துநல் பாதை தவறிட
உன்னும் பொழுதினில் என்றன்
காதில் விழுந்தது மேதை அறிஞனின்
கன்னல் திருவிடப் பேச்சு
நீதி உணர்ந்துநம் நாடு திரும்பிட
நெஞ்சு திரும்பிய தம்மா!
— புலவர் சொ. இராமச்சந்திரன்,
பள்ளத்தூர்.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
ஓதல் புரிந்தனன் "ஓ"மென் றுரைத்தனள்
உண்மை உணர்ந்தனர் பெற்றோர்.
"ஈதல் இயலுமோ? வேறோர் இனத்தவன்"
என்றே அடித்தனர்; பெண்ணோ
சாதல் அடைந்தனள்; சாதித் திமிரெனும்
சட்டம் இரண்டுயிர் கொள்ள!
— பொ. மார்க்கண்டன்,
சோமசுந்தரம்சேரி.

★

கோதை சிரித்தனள்; கீதம் இசைத்தனள்
கூவி யழைத்தனள் கொஞ்சி,
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை!
போதை மதுச்சுவைக் கோவை யுதட்டினைப்
புல்லும் பொழுதினில், மிஞ்சும்
பாதிக் கனவொடு மீதி கலைத்தனள்
பாவை; மனைவியென் வஞ்சி...!
— சிற்பி, பொள்ளாச்சி.

★

கூதல் வளர்த்திடும் போதில் முகைகொளும்
முல்லை எழில்நகைப் பல்லும்
சூதில் உருண்டிடுங் காயின் அளவெனும்
மார்பின் உயர்விடத் தோடு
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
நோதல் இழிவென ஓதல் எனதுயிர்
போதல் விழைந்திட லன்றோ?
— அ. சிவன், தென்மாப்பட்டு.

★

கோதில் குணத்துடன் குன்று நெறியுடன்
கூர்த்த அறிவுடன் கற்பில்
ஏதில் நிறையுடன் எண்ண உணர்வுடன்
இன்பச் சுவையுடன் அன்பால்
தூது விடுத்திடும் தூய்மை உணர்த்திடும்
துன்பம் மறைத்திடும் இன்பக்
காதல் விளைத்திடு மாதர் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
—மூ. சாந்தம், மதுரை.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
காதல் விளைந்தது காலச் சுழற்சியில்
கண்டுவிட் டேனவள் நெஞ்சை
'மாதற் கணிகல மாக விளங்கிடும்
மாண்புயர் கற்பெனுந் திண்மை
ஓதற் கரிய முறையினில் ஓம்பிடும்
ஒண்டொடி யாமவள்' என்றே!
— செகதவல்லி, திருவெண்ணெய்நல்லூர்.

★

"காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
காதல் விளைத்திடு மாதின் தனத்திரு
வெற்புந் துளைத்தன நெஞ்சை
மோதல் விளைத்திடு மாதின் உடலுரு
மேனி துளைத்தன நெஞ்சை
காதல் விளைத்திடு மாதின் உடலுனைத்
தாக்கினும் வாழிய நெஞ்சே!"
— காட்டுலிங்கன், அரங்கநாதபுரம்.

★

ஈதல் அறம்பொருள் இன்பம் உலகினில்
என்றும் அளித்திடும் பெண்டிர்
நோதல் மிகச்செயும் பேதை எனும்குறு
நோக்கின் பெருந்துயர் ஏதால்
சாதல் நலமெனச் சாற்றித் துணிந்திடத்
தாங்கும் மனமிலா என்னைக்
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை.
— அ வே. காசிநாதன்,
அமிர்தராயன்கோட்டை.

★

சீதந் துளிர்த்திடுங் கோல மலரெனச்
சிந்தை கவர்ந்திட வந்து
காதல் விளைத்திடும் மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை!
பாதி உயிரொடு ஆவி துடித்திடும்
பாவை அவள்நினை வாலே.
சாதல் தவிர்த்தென தாவல் குறைத்திடத்
தண்டேன் மலரிதழ் தேவை!
— சு. ச. ஆறுமுகம், அருப்புக்கோட்டை.

★

மோது களத்திடை வீரர் விடுத்திடு
முன்வை படுத்திய கொல்வேல்
ஓது பகைவரின் வாழ்வை முடித்திட
மார்பைப் பிளப்பது போலே
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
மாதர் விழியினைத் தீதில் மலரென
வையம் புகழ்வதும் ஏனோ?
— கு. பரிமளம், கமுதி.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணும் துளைத்தன நெஞ்சை,
சூது மிகுந்தவர் நாவிற் சுடுவடு
தன்னிற் றுயர்தரும்; உண்மை;
ஈதும் அவள்தரு நோயாம்; இதன்மருந்
தீதல் அவள்கடன் அன்றோ?
ஏதம் பலவுடன் யானும் மடிந்திட
எண்ணம் அவள்கொளல் நன்றோ?
- தாம்பரக்கிழான், தாம்பரம்.

★

மோதி வரையினில் முட்டிக் குமுறிடும்
மோன நதியினைப் போல
ஓதற் கரியவெம் பொல்லாப் புலியினை
ஓட்டி வளைத்துயிர் கொன்றும்
நீதி நெறியுடன் வீரம் விரவிடும்
நேற்றைத் தமிழ்மகன் அம்பாய்க்
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை.
— பத்மராசன், செய்யாறு.

★

ஓதல் இடத்தினில் தீதில் மனத்துடன்
ஒன்றிப் பழகிய மாதே
"ஈதல் அறம்"எனு மேதை யரின்சொலை
இன்று மறந்தனள்; ஏது?
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை;
மோதல் எடுக்குது; பேதை பொறுப்பனோ
— மா சுப்பையா, நாரைக்கிணறு.

★

தீதில் உளத்திலே போதைக் களிப்பினில்
திண்மை நிலைத்திட இன்பக்
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
நோதல் அழித்திடு கோதை நினைத்திடின்
நுந்தும் உணர்ச்சியில் இன்பம்
சாதல் கிடைப்பினும் மாதை அணைத்துமே
சாய்ந்து மடிந்திடல் உண்மை!
— பி. மணிவேந்தன், அய்யாபுரம்.

★

நாத மிசைத்திடு நங்கை சிரிப்பொலி,
நையப் புடைக்குதய் யய்யோ!
மோத வருமவள் மோகம் விடுகணை
முட்டத் துடிக்குதென் தோளை!
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு,
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
சாதல் மிகவெளி தென்பேன் துடியிடைத்,
தையல் புரிந்திடும் போரில்!
— போடி. மீராமன்னன், மீனாட்சிபுரம்.

★

சீத மதிப்பிறை போலொளிர் நெற்றியள்;
சேல்விழி யள்;மலர் மஞ்ச
மீது கிடக்கையில் "போதை மிகுத்தது
மேன கையே"எனக் கெஞ்சப்
போதும் விடுத்திடு; ஏத மிருக்குது
போய்வி டுவாயென அஞ்சக்
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை!
—அ சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

★

பாதி இரவினில் வந்த மடக்கொடி
பக்கம் நெருங்கின ளந்தக்
கோதை விரும்பின ளின்ப மடைந்திடக்
கைக ளணைத்தன என்னை
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
நாத மிசைத்திடும் வாயி லென்னிதழ்
"ஊறிப்" பொழிந்தன முத்தம்!
— ப. கா. தமிழ்த்தாசன், ஆர்விபட்டி.

★

சீத நிலவொளி சிந்து முகத்தெழில்
சிந்தை கவர்ந்திட நின்றேன்;
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை!
ஏத மிலாத்தமிழ் ஏடு சொலுங்கவி
இன்ப மெலாநிறை அன்பால்
கோதை விழிமலர் கூறுங் கவிதையில்
கூடி வருந்திடக் கண்டேன்!
— வானவன், மயிலாப்பூர்.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணும் துளைத்தன நெஞ்சை
மோதும் மனத்தொடு போதை மிகுந்திட
மங்கை இழுத்தனள் என்னை
ஏதம் இலதெனப் பாதை விரைபவள்
அங்கை பிடித்ததும் அந்த
மாதும் அலறிடப் போதும் கனவென
மொத்தி எழுப்பினள் அன்னை.
— அர. இராசாராமன், வளவனூர்.

★

பாதத் தணிந்திடு நாதச் சிலம்புகள்
பாக்க ளிசைத்தன கொஞ்சி
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை
சீதப் பனிக்கடல் முத்தை நிகர்த்தபல்
சேதி யுரைத்தன, சென்றேன்!
மாதவி யன்னவள் மானுய் அணைத்தனள்
மங்காத் தமிழ்ச்சுவை கண்டேன்!
— கா. நடராசன், சென்னை.

★

பேதை முகத்தினில் பேசும் விழிகளில்
பின்னும் உலகினைக் கண்டேன்!
கோதை சிரிப்பினில் மிஞ்சும் பொலிவினில்
கொஞ்சும் எழிலினை உண்டேன்!
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை!
போதம் இழந்திடப் பேச்சுக் குலைந்திடப்
புத்தி சிதறிட நின்றேன்!
— முத்துதாசன், தஞ்சை.

★

சீதத் தமிழினை ஓதிக் களிதரும்
செவ்வை நிறம்படர் நாவும்
நாதம் எழுப்பிடு பாதச் சிலம்படி
நாட்டம் இழுத்திடு நடையும்
ஏதம் அழித்திடு சாதல் போக்கிட
ஏந்து கரத்தின்அ ணைப்பும்
காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை.
— வி. எஸ். வேலாயுதம், சென்னை.

★

காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை!
பாத அடிமலர்ப் போதைச் சிலம்பொலி
பாயுங் கனவதில் வந்தே!
கூதல் பொழிந்திடு சீத முழுமதிக்
காலந் தனிலவள் இன்றேல்,
சாதல் சுகந்தரும் பாரில் எனவுளம்
சாற்றின் இலையதில் விந்தை!
—வல்லம் மை. மு. மன்னன்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.